பக்கங்கள் : 16+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 29 புதன்கிழமை (12.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :136

## சுய பாதுகாப்பு ஏற்பாட்டுடன் புலிகளின் கிழக்குத் தளபதிகள் கடல் மார்க்கமாக எந்நேரமும் வன்னிக்குப் புறப்படத் தயார்!

### அரசுத்தரப்புக்கு நோர்வே ஊடாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 12

விடுதலைப் புலிகளின் தளபதிகளும், போராளிகளும் கிழக்கிலிருந்து வன்னி வந்து செல்வதற்கு கெடுபிடியற்ற உரிய வசதிகளைச் செய்வதற்கு அரசு மறுத்து வருவதனால் எந்தக் கணத்திலும் புலிகள் தமக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாமே செய்துகொண்டு தம் பாட்டில் கடற்போக்குவரத்துச் செய்து வன்னிக்கு வருவார்களென விடுதலைப் புலிகள் நேற்று இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றனர் என அறியவருகின்றது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக இந்தத் தகவலை நேற்று அரசுக்கு அறிவித்திருக்கும் விடுதலைப்புலிகள், கிழக்கிலிருந்து வன்னிக்கு கடல் மார்க்கமாகச் செல்லும்போது ஏற்படுத்தப்படக்கூடிய ஆபத்துகளைச் சந்திக்கவும் தாங்கள் தயாராகவே இருக்கிறார்கள் என்பதையும் தெரியப்படுத்தியிருக்கிறார்கள் என அறிய வந்தது.

நேற்று அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பாலித்த கொஹோன்னவை சந்தித்த இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், புலிகளின் இந்த நிலைப்பாட்டை அவருக்குத் தெரியப்படுத்தியிருக்

(16ஆம் பக்கம் பார்க்க)

# தம்பலகாமம் கிளைமோரில் 10 படையினர், சாரதி மரணம்!

## ஒன்பது கடற்படைச் சிப்பாய்களும் இரு பிரிட்டிஷ் பிரஜைகளும் காயம்



தாக்குதலுக்கு இலக்கான பஸ்

நன்றி: 'சங்கதி'

திருமலை, ஏப்ரல் 12

**திருகோணமலையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் கடற்படைச் சிப்பாய்கள் பத்துப் பேரும், சிவிலியனான பஸ் சாரதியும் உயிரிழந்தனர். மேலும் ஒன்பது கடற்படைச் சிப்பாய்களும், பிரிட்டிஷ் பிரஜைகள் இருவரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.**

திருகோணமலை, தம்பலகாமம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் ஒன்றரை மணியளவில் கடற்படையின் வாகனத் தொடரணியை இலக்குவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டு விடுமுறைக்குச் செல்லும் சிப்பாய்களை ஏற்றிச்சென்ற பஸ் திருகோணமலை - ஹபரண வீதியில், கந்தளாய் ஒன்பதாவது மைல்கல் அருகே இந்தக் கிளைமோரில் சிக்கியது.

இந்தத் தாக்குதல் நடைபெற்ற போது அந்த இடத்திற்கு அருகில் வாகனமொன்றில் சென்றுகொண்டிருந்த பிரிட்டிஷ் பிரஜைகள் இருவர் காயமடைந்தனர். வில்லியம்ஸன் கிரின்பீஸ் என்பவரும் லின்ஸி என்ற மற்றப் பெண்மணியும் உடனடியாகக் கந்தளாய் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இவர்கள் சுற்றுலாப் பயணிகளெனத் தெரிவிக்கப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரவிராஜ் எம்.பி. தாக்கப்பட்டார்!

திருமலை, ஏப். 12

மாமனிதர் விக்னேஸ்வரனின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக நேற்றுத் திருகோணமலைக்குச் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் மீது சிங்களக் காடையர்கள் நேற்றுப் பிற்பகல் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

திருகோணமலை அபயபுரப் பகுதியில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் காயமடைந்த ரவிராஜ் எம்.பியும், அவரது மெய்ப்பாதுகாவலர்களும் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

அபயபுரம் பகுதியில் ரவிராஜ் எம்.பியின் வாகனத்தை

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதர் விக்கியின் பூதவுடல் நேற்று திருமலையில் விதைப்பு

திருகோணமலை, ஏப். 12

சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் வ.விக்னேஸ்வரனின் பூதவுடல் நேற்று மாலை திருகோணமலை அன்புவழிபுரம் பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.



இறுதி ஊர்வலத்தில்...

ஆயிரக்கணக்கானோர் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். இந்துசமய முறைப்படி இறுதிக்கிரியைகள் நடைபெற்றதையடுத்து நல்லடக்கம் இடம்பெற்றது.

முன்னதாக வன்னியிலிருந்து ஊர்வலமாகத் திருமலைக்கு எடுத்துவரப்பட்ட மாமனிதர் விக்னேஸ்வரனின் பூதவுடல் நேற்று அதிகாலை 3.30 மணி முதல் காலை 7 மணி வரை திருமலை சுங்க வீதியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைக் காரியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு வந்த பெருந்திரளான மக்கள் தமது இறுதி அஞ்சலியை மாமனிதருக்குச் செலுத்தினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி ஜெனீவாப் பேச்சு நடப்பது பெரும்பாலும் துர்லபம்

கொழும்பு, ஏப். 12

அடுத்த சுற்று அமைதிப் பேச்சுகள் முன்னர் திட்டமிட்டபடி ஜெனீவாவில் எதிர்வரும் 19, 20, 21ஆம் திகதிகளில் நடைபெறுவது பெரும்பாலும் சாத்தியமல்ல என்று தெரிகின்றது.

சம்பந்தப்பட்ட இரு தரப்புகளான அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் தீவிரமடைந்து வரும் முரண்பாடு, அமைதிக்கான நேரடிப் பேச்சு இருதரப்புகளுக்கும் இடையில் இப்போதைக்கு நடைபெறுவதை அசாத்தியமாக்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தமது கிழக்குத் தளபதிகள் வன்னிக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

**நாளைய கல்விச்சுடரில்**

**பௌதிகவியல் வினாத்தாள், உயிரியல் விடைக் குறிப்புகள் என்பன வெளிவரும்.**

## பொது இணக்கப்பாடு காண்பதற்கு ரணிலுடன் நேரில் பேசுவார் மஹிந்த

கொழும்பு, ஏப். 12

அமைதிப் பேச்சுகள் குறித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடிப் பேச்சுகளை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கிறார் எனத் தெரிய வருகிறது.

தற்போது அமெரிக்காவிற்கான பயணமொன்றை மேற்கொண்டுள்ள ஐ. தே.கட்சித் தலைவர் நாடு திரும்பிய பின்னர் தாம் அவரை அழைத்துப் [illegible]

(16ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வுக் கழகத்தினரை விடுவிக்கக் கோரி இன்று பேரணி

யாழ்ப்பாணம்,ஏப்.12


கடந்த ஜனவரி மாதம் இனம்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிக்கக் கோரி இன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைதிப் பேரணி நடை பெறவுள்ளது.

இதற்குரிய ஏற்பாட்டினை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்டுள்ளது.

இன்று மு.ப. 9.30 மணிக்கு நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் முன்பாக இருந்து அமைதிப் பேரணி ஆரம்பமாகிகோயில் வீதியூடாக யாழ். செயலகத்தைச் சென்றடையவுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மிருசுவிலில் இடம்பெற்ற கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதலில் சிக்கி உயிரிழந்த 'கியூடெக்' நிறுவனத்தின் பணியாளர்கள் இருவரினதும் அஞ்சலி நிகழ்வு நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரமுகர்கள், பொதுமக்கள் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதையும் - உயிரிழந்த செ.பிரதீப்குமார், எஸ். கந்தாபத்மநாபன் ஆகியோரது பூதவுடல்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஒளி அதிரன்)

# 'கியூடெக்' பணியாளர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஏப்.12

மிருசுவிலில் இராணுவ வாகனத்தை இலக்கு வைத்து நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கண்ணிவெடித்தாக்குதலில் சிக்கி உயிரிழந்த 'கியூடெக்' தொண்டு நிறுவனப் பணியாளர்கள் இருவரின் பூதவுடல்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி உயிரிழந்த செ.பிரதீப்குமார், எஸ்.கந்தாபத்மநாபன் ஆகியோரின் பூதவுடல்கள் நேற்றுமாலை யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து யாழ். மத்தியூஸ் வீதியில் உள்ள 'கியூடெக்' தொண்டு நிறுவன தலைமை அலுவலகத்துக்கு எடுத்துவரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

அங்கு 'கியூடெக்' தொண்டுநிறுவன இயக்குநர் வணபிதா. கி.ஜெயக்குமார் தலைமையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

உயிரிழந்த பிரதீப்குமார், பத்பநாபன் ஆகிய இருவரது பூதவுடலும் நேற்றுமாலை யாழ். மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள 'கியூடெக்' தலைமைக் காரியாலயத்திற்கு எடுத்துவரப்பட்டு, அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இதில் யாழ். ஆஜர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பணியாளர்கள், மதகுருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மதகுருக்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகளும் அஞ்சலி நிகழ்விற்கு சமுகமளித்திருந்தனர்.

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக சோககீதம் இசைக்கவிடப்பட்டிருந்ததுடன், அரசசார்பற்ற நிறுவனங்களின் வாகனங்களில் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. அஞ்சலி நிகழ்வின் பின்னர் பூதவுடல்கள் உயிரிழந்தவர்களின் இல்லங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. (ஒ-7)(33)

## வயோதிபர் சடலத்தை பொறுப்பேற்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஏப்.12

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த பெப்ரவரிமாதம் 28ஆம் திகதி உயிரிழந்த வயோதிபர் ஒருவரின் சடலத்தை பொறுப்பேற்குமாறு கோரப்பட்டுள்ளது.

இச் சடலம் இரண்டு மாதகாலமாக உறவினர்களால் பொறுப்பேற்கப்படாமல் மருத்துவமனையின் பிரேத அறையில் பராமரிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை பொலீஸ் பிரிவு அறிவித்திருக்கின்றது.

ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த பழனிவேல் அல்விமுத்து (வயது 58) என்ற வயோதிபர் கடந்த பெப்ரவரிமாதம் 6 ஆம் திகதி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார் என்று மருத்துவமனைப் பதிவேட்டில் இருந்து தெரியவருகிறது. இறந்த வயோதிபரின் உறவினர்கள் மருத்துவமனையின் பொலீஸ் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-14-190)(33)

## யாழ். ஆயர் விடுத்த இரங்கல் செய்தி

மிருசுவில் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி உயிரிழந்த 'கியூடெக்' பணியாளர்களின் மறைவுக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை விடுத்துள்ள இரங்கல்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். ஏ-9 பிரதான வீதியில் மிருசுவில் பகுதியில் நடைபெற்ற கிளைமோர்த் தாக்குதல் சம்பவம் பற்றி அறிந்து நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். சமாதான காலத்தில் அமைதியைக் குழப்பி அதிர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய இச் சம்பவங்கள் பொது மக்கள் வாழும் இடங்களில் ஒருபோதும் நடைபெறக்கூடாது என சமாதான விரும்பிகள் பலர் இச் சம்பவத்தில் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் 'கியூடெக்' - 'கரித்தாஸ்' நிறுவனப் பணியாளர்களான சண்முகரெட்ணம் கந்தாபத்மநாபன், செல்வேந்திரா பிரதீப்குமார் ஆகிய இருவரும் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களோடு மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களின் குடும்பத்தினருக்கு எமது கவலையையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கிறோம். இறந்தவர்களின் ஆன்மா இறைவனின் சம்பாவனையைப் பெற வேண்டுகின்றோம்.

இதுபோன்ற சம்பவங்கள் சமாதான காலத்தில் இனிவருங்காலங்களில் நடைபெறக் கூடாது என சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## கிளிநொச்சி இணையம் அனுதாபம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

மிருசுவிலில் உயிரிழந்த 'கியூடெக்' பணியாளர்களின் மறைவுக்கு கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது:-

மிருசுவில் பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி மரணமடைந்த மனித முன்னேற்ற நடுநிலையப் பணியாளர்களின் செய்தி கேட்டு கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மிகுந்த கவலை கொள்கின்றது. இவர்களது மறைவினால் ஆறாத்துயரில் இருக்கும் இவர்களுடைய குடும்பங்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவிக்கின்றது. இச்சம்பவத்தின்போது காயமடைந்து வைத்தியசாலையில் இருக்கும் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் ஏனைய இரு பணியாளர்களும் விரைவாகச் சுகமடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இவர்களுடைய குடும்பத்தார்க்கும் ஆறுதல் கூறுகின்றோம் - என்றுள்ளது. (ஒ) (33)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹென்றிக்ஷன் நேற்று யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் உல்ப் ஹென்றிக்ஷன் நேற்று குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டார்.

விமானு மூலம் பலாலி வந்தடைந்த அவர் நேற்று நண்பகல் பலாலிப் படைத்தளத்தில் படையதிகாரிகளைச் சந்தித்து குடாநாட்டு நிலைமை தொடர்பாகக் கலந்துரையாடினார் என்றும் -

மிருசுவிலில் நேற்றுமுன்தினம் கண்ணிவெடித்தாக்குதல் இடம்பெற்ற இடத்தையும் அவர் நேரில் சென்று பார்வையிட்டார் என்றும் - தெரியவருகிறது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு அவர் விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

அவரது விஜயம் தொடர்பாக அறிவதற்கு கண்காணிப்புக்குழுவின்யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொண்ட போது அவர்கள்இது பற்றித் தமக்குஎதுவும் தெரியாது எனக் கூறினார்கள் .

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் இன்று கிளிநொச்சிக்குச் செல்வார் என்று கூறப்படுகிறது. (ஒ-8)(18)

## வாளுடன் சைநானவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஏப்.12

கொள்ளைகள் மற்றும் வீடுபுகுந்து தாக்கும் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் கைதா[illegible] இளைஞரை எதிர்வரும் 21ஆம் திகதிவ[illegible] விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீ[illegible]ன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொள்ளைகள் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின்பேரில் இருவர் ஏற்கனவே பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வாளுடன் சென்றார் என்று கூறப்படும் கோண்டாவிலைச் சேர்ந்த ஒருவரை கோப்பாய்ப் பொலீஸார் கைதுசெய்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் இவர் ஆஜர்ப்படுத்தப்பட்டார். சந்தேக நபரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறும் - சந்தேகநபரின் கைரேகை அடையாளத்தை கொள்ளைச் சம்பவங்கள் நடந்த இடங்களில் காணப்பட்ட கைரேகை அடையாளங்களுடன் ஒப்பிடுமாறும் அப்போது நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-202)(33)

## லொத்தர்சபை இசைநிகழ்ச்சி இம்முறை யாழில்

யாழ்ப்பாணம், ஏப்.12

தேசிய லொத்தர் சபையினால் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடத்தப்பட்டுவரும் இசை நிகழ்ச்சித்தொடர் இம்முறை சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்த இசை நிகழ்ச்சியை இந்தியாவின் பிரபல தொலைக்காட்சி அறிவிப்பாளரான பாத்திமா பாபு தொகுத்தளிக்கவுள்ளார்.

தென்னிந்திய நகைச்சுவை மற்றும் நடனக் கலைஞர்களும் கலந்துகொள்ளும் இந்த நிகழ்ச்சிக்கான அனுமதி முற்றிலும் இலவசமெனத் தேசிய லொத்தர் சபை அறிவித்துள்ளது. (க)

## சிறுவர் அரங்கக் கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.12

'செயல்திறன் அரங்க இயக்கம்' வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கக் கருத்தரங்கு 3ஆவது அமர்வினை தென்மராட்சி கல்வி வலயத்துடன் இணைந்து செயற்படுத்துவதற்கு ஒழுங்கு செய்துள்ளது.

இக் கருத்தரங்கின் முதலாவது அமர்வு 2003ஆம் ஆண்டு நாவலர் மண்டபத்திலும் இரண்டாவது அமர்வு இந்த ஆண்டு மார்ச் மாதம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் நடைபெற்றன.

இதன் மூன்றாவது கருத்தரங்க அமர்வு இன்று புதன்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் [illegible] தொடக்கம் பி.ப. 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் திருமதி மகாலிங்கத்தின் (கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி கல்வி வலயம்) சிறப்புரையும், 'சிறுவர் அரங்கு ஊடாக நாடக எழுத்துருப் படைப்பாக்கம்', 'சிறுவர் நாடகத் தயாரிப்பு', 'சிறுவர் நாடகப் பாடல்கள்' தொடர்பான கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன.

இக் கருத்துரைகளினை குழந்தை ம.சண்முகலிங்கம், தே.தேவானந் (இயக்குநர், செயல்திறன் அரங்க இயக்கம்), நா.சிவசிதம்பரம் (ஆசிரியர், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோர் வழங்கவுள்ளனர்.

கருத்துரையோடு குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதி நெறியாள்கைசெய்த 'பந்தயக் குதிரையார்', 'கண்மணிக் குட்டியர்' ஆகிய இரண்டு நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன. (ஐ) (33)

## படையினர் அத்துமீறல் குறித்து மாணவர் பேரவை முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.12

இராணுவத்தினர் அத்துமீறலில் ஈடுபட்டனர் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை முறையிட்டுள்ளது.

இதற்கான முறைப்பாட்டுக் கடிதத்தை கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும் அதன்பிரதிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர், யாழ். அரச அதிபர் ஆகியோருக்கும் பேரவையினர் அனுப்பியுள்ளனர்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த 10ஆம் திகதி மாலை 6.15 மணியளவில் எமது நிறுவன வளவிற்குள் நுழைந்த ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் எமது நிறுவன கட்டடத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த தியாகதீபம் அன்னை பூபதி தாய் அவர்களின் திருவுருவப் படத்தினை எடுத்துச்சென்றனர். அத்துடன், திருகோணமலையில் சுட்டுக்கொல்லப்பட்ட மாமனிதர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடியினையும் எடுத்துச்சென்றனர்.

இச் சம்பவமானது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மாறாக எம்மை அச்சுறுத்தும் செயலாகும். இது ஒரு அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

அத்துடன், எமது அலுவலகத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்களின் அலுவலகமும் இயங்கி வருகின்றது. இச்சம்பவத்தினை உடன் விசாரித்து இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாவண்ணம் பார்க்குமாறு தங்களை வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ஒ)(33)

## சிறந்த வீரர் விருது பிளின்டோபுக்கு

'கிரிக்கெட்டின் விவிலியம்' என்று புகழப்படும் 'விஸ்டன்' சஞ்சிகை கடந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட்வீரர் இங்கிலாந்து அணியின் அன்ரூ பிளின்டோபை தேர்ந்தெடுத்துள்ளது. 2003ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டுவருகிறது.

ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் ஆகிய இருவரும் முறையே 2003ஆம் ஆண்டிலும் 2004ஆம் ஆண்டிலும் இந்த விருதைப் பெற்றுள்ளனா. (ஒ)(33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# யுத்தவாதிகளின் பிடியிலிருந்து வெளிவருமா ஆயுதத் தலைமை?

அடுத்த சுற்று அமைதிப்பேச்சு திட்டமிட்டபடி நடைபெறுமா என்பதுமட்டுமல்ல, அமைதிநிலைமையே -யுத்தநிறுத்த சூழ்நிலையே - நீடிக்குமா என்பதும் பெருங்கேள்விக்குறியாக மாறியிருக்கின்றது.

முதலாவது சுற்று ஜெனிவாப் பேச்சில் பொதுக் கூட்டறிக்கை ஒன்றை வெளியிடும் நிலைக்கு இணங்கிவந்த மஹிந்தவின் புதிய அரசும் விடுதலைப் புலிகளும் அதன் பின்னர் மீண்டும் விலகிப் போகத் தீர்மானித்து விட்டார்கள்போலும். முதல்சுற்றுப்பேச்சை அடுத்து களத்தில் நடைபெறும் சம்பவங்கள், இருதரப்பினரும் வெளியிடும் தகவல்கள், கூற்றுகள், பேட்டிகள், அறிக்கைகள், செய்திகள் என்பன அதைத்தான் கோடிட்டுக்காட்டுகின்றன.

பேச்சுமூலம் தீர்வுகாண்பதற்கு அவசியமான பரஸ்பர விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, ஆரோக்கியமான கருத்தாடல்கள் போன்றவற்றையெல்லாம் துறந்து, சம்பந்தப்பட்ட இரு தரப்பினரிடையேயும் பகை யுறவும், விரோத மனப்பான்மையும், குரோத உணர்வும் மேலோங்கி வருவது அப்பட்டமாக வெளியே தோற்றுகின்றது.

இந்தப்போக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - இனப்பிணக்குக்கு இணக்கத்தீர்வு ஒன்றைக் காண்பதற்கு உதவப்போவதில்லை என்பது உறுதி.

யுத்தநிறுத்த ஏற்பாடுகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படாமல், அமைதி நிலை ஸ்திரமற்றதாகிவரும் இந்தச் சந்தர்ப்பத்தில், திட்டமிட்டபடி பேச்சுகள் நடைபெறுவது சந்தேகம் என்ற நிலைமை நீடிப்பது யுத்த நிறுத்தமே குழம்பிப்போகும் ஆபத்துக்கு இட்டுச் செல்லலாம்.

பௌத்த சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளினது ஆதரவிலும், யுத்தத்தீவிரப் போக்குடைய படை அதிகாரிகளினது ஆலோசனையிலும் இயங்கும் தென்னிலங்கையின் புதிய அரசுத் தலைமை, அமைதி முயற்சிகள் தொடர்பான விடயத்தைத் தனது தவறான கையாளுகை மூலம் போட்டுடைக்கப்போகின்றது என்ற சந்தேகம் தீவிரமடைகின்றது.

முதல்சுற்று ஜெனிவாப்பேச்சு இணக்கப்பாட்டுக்கு முரணாக ஒட்டுப்படைகளின் வன்முறை அட்டகாசம் கட்டவிழ்த்துவிட்டதுபோன்று தொடர்கின்றமை, திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் சுட்டுப் படுகொலை, அண்மைய நாள்களில் அதிகரித்துவரும் - அரச படையினர்மீதான - கிளைமோர்த் தாக்குதல்கள், புலிகளின் கிழக்குத் தளபதிகள் தமது தலைமையைச் சந்திப்பதற்கு வசதி அளிக்காமல் அரசுத்தரப்பு கெடுபிடிகளைப் போடுவது என்பனவெல்லாம் அமைதி முயற்சி தடம்மாறி யுத்த திசையை நோக்கிச் செல்கின்றமையை உறுதிப்படுத்துகின்ற நிகழ்வுகளாகும்.

இரண்டு தசாப்தகாலக் கொடூரப் போர், யுத்த நிறுத்த உடன்பாடு மூலம் நிறுத்தப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. தமிழர்களைப் பொறுத்தவரை - தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை யுத்தநிறுத்தத்தின் மூலம் துப்பாக்கிகள் ஓய்ந்தனவே தவிர, வேறு எந்தப் பலனும் - பயனும் - அவர்களுக்குக் கிட்டவில்லை. அவர்களின் அவசர - அவசிய - மனிதாபிமானத் தேவைகள் கூட நிறைவு செய்யப்படவில்லை

ஆனால், யுத்தநிறுத்தத்தின் நற்பலனை தென்னிலங்கை நன்கு அனுபவித்துவிட்டது. அதனால் கடந்த பல ஆண்டு காலத்துக்கு நீடித்த யுத்தக் கொடூரங்களும், அதன் பெறுபேறான மோச விளைவுகளும் தென்னிலங்கைக்கு மறந்து விட்டன போலும்.

அமைதி முயற்சிகள் தொடர்பான விடயத்தில் சமதரப்பாகப் பேணப்பட வேண்டிய - மதிக்கப்பட வேண்டிய - புலிகளை, அரசுத்தரப்பு தூக்கி எறிந்து நடப்பதும்,விட்டேத்தியாகச் செயற்படுவதும் இந்தப் பின்னணியில்தான்.

பேரினவாதிகளினதும், யுத்தவாதிகளினதும் பிடிக்குள் சிக்கியிருக்கும் தென்னிலங்கை அரசுத் தலைமை இத்தகைய தனது போக்கை மாற்றி, சமாதான விரோதிகளின் பிடியிலிருந்து வெளியேவந்து, இதயசுத்தியோடு - நேர்மையாக - அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கும், புலிகளுக்கு சம அந்தஸ்து அளித்து பேசுவதற்கும் முன்வராவிட்டால் இப்போது சீர்கெட்டுச் செல்லும் நிலைமை இனி சீர்படுத்தவே முடியாமல் போய்விடும். யுத்தம்தான் இனி என்றாகிவிடும்.

மாறுமா தென்னிலங்கையின் போக்கு? காலம் தான் பதில் கூற வேண்டும்.

# ஜெனீவா உடன்படிக்கையைப் புலிகள் மீறிவிட்டனர் என்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஏப்.11

கடந்த ஜெனீவாப் பேச்சுவார்த்தையின்போது பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்துவது இல்லை என்று விடுதலைப் புலிகள் உறுதி அளித்திருந்தார்கள். ஆனால் தற்போது 4 நாள்களுக்குள் இரண்டு கிளைமோர் தாக்குதல்கள் நடந்துள்ளன.

-இவ்வாறு தெரிவித்தார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க.

மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

பாதுகாப்புப் படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் மற்றுமோர் கிளைமோர்த் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

கொடிகாமத்துக்கும் முகமாலைக்கும் இடையே ஏ-9 நெடுஞ்சாலையில் மிருசுவில் என்ற இடத்தில் இச்சம்பவம் பிற்பகல் 2.55 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஆறு இராணுவத்தினரை ஏற்றிக்கொண்டு கொடிகாமத்தில் இருந்து முகமாலைக்குச் சென்ற வாகனம் மிருசுவில் சந்தியில் கிளைமோர் கண்ணிவெடியால் தாக்கப்பட்டது.

இதில் 5 படையினர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஒருவர் படுகாயமடைந்து பலாலி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்ட செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் 'கியுடெக்' எனும் அரச சார்பற்ற நிறுவனத்தின் வாகனமும் சிக்கியுள்ளது. இந்த அமைப்பு யாழ்.பகுதியில் மனிநேய பணிகளையும் சுனாமி மறுவாழ்வுப் பணிகளையும் செய்து வருகின்றது. அந்த வாகனத்தில் 4 பேர் இருந்துள்ளனர்.

இருவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுவிட்டனர். இருவர் காயமடைந்துள்ளனர். அவர்கள் படையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் போர்நிறுத்தத்தை மீறும் ஒரு செயலாகும்.

நிச்சயமாக இருவிடயங்களை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். குடா நாட்டில் இதுபோன்ற செயல்களை புலிகளால் மாத்திரமே செய்யமுடியும். இது தவிர எங்களுக்கு முழுமையான தகவல்கள் இருக்கின்றன.

இவ்வாறான தாக்குதல்கள் நடத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாக உளவு அறிக்கைகள் தெரிவித்திருந்தன. கடந்த இரண்டு மாதங்களில் பாதுகாப்புப்படைகளுக்கு எதிராக நடத்தப்பட்ட அனைத்துத் தாக்குதல்களுமே புலிகளால் தான் நடத்தப்பட்டன.

ஜெனிவாப்பேச்சுக்கள் நடைபெற்ற பின்பு தாக்குதல்கள் சற்று நின்றுபோயிருந்தன. தற்போது அவை மீண்டும் ஆரம்பித்துவிட்டன. கடந்த மூன்று தினங்களில் மாத்திரம் மூன்று தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இவை அனைத்துமே இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்கள். இவைதவிர நோர்வேத் தீவிலும் திருமலை சம்பூரிலும் இருந்து கடற்படைக்கு எதிரான தாக்குதல்களும் கடந்த இரண்டு மாதங்களில் நடந்துள்ளன.

கற்பிட்டிக் கடலில் கடற்படையினர் மீது தற்கொலைத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள பேச்சுத்தொடர்பாக என்னால் கருத்து ஏதும் கூறமுடியாது. விடுதலைப் புலிகள் தாங்கள் கொடுத்த உறுதிப்பாட்டின்படி நடக்க வேண்டும்.

பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தக் கூடாது. அவ்வாறே பாதுகாப்புப் படையினரும் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறமாட்டார்கள். இந்த நாட்டிற்கு அமைதி கிடைக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். ஜெனிவாவில், நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையை நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

- என்றார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் இத்தாக்குதல் சம்பவத்தை மறுத்துள்ள வேளையில் இவ்விடயம் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவிக்கையில் கூறியதாவது:-

இச்சம்பவம் தொடர்பாக நாம் விசாரணைகளை நடத்திவருகின்றோம். இது ஒரு கவலைக்குரிய விடயம். கடந்த டிசெம்பர் ஜனவரி மாதங்களில் தொடர்ந்து கிளைமோர் தாக்குதல்கள் இடம்பெற்ற போது இத்தாக்குதல்களை மக்களே நடத்துகின்றார்கள் எனப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால், அதனை நம்புவதற்கு தகுந்த உறுதியான ஆதாரங்கள் ஏதும் இல்லை -என்றார்.

(ஐ-12)

# சிவபூமி மனவிருத்திப் பாடசாலை புதிய மாடிக் கட்டடத் திறப்புவிழா

வடமராட்சி,ஏப்.12


கோண்டாவில் சிவபூமி சிறுவர் மன விருத்திப் பாடசாலையின் புதிய மாடிக் கட்டடத் திறப்புவிழா எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய ஆசிரியர் சிவப்பிரகாசம்பிள்ளை - அங்கையர்க்கண்ணி தம்பதியினரும் சிறப்பு விருந்தினராக ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப ஸ்தாபகர் வே.சிவசுந்தரமும் கலந்துகொள்வர். பிற்பகல் 3 மணிக்கு திருமுறை வழிபாட்டுடன் மண்டபம் திறந்து வைக்கப்படும்.

நிகழ்வில் வரவேற்புரையை சிவபூமி பாடசாலையின் உப தலைவர் க.சிவாஜியும், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரும்-

வாழ்த்துரையை ஒப்புரவாளர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் ஆகியோரும் -

நிறைவுரையை வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகமும் சிவபூமி பாடசாலையின் செயலாளருமான ந.சதாசிவஐயரும் நிகழ்த்துவர்.



பாடசாலையின் முகப்புத் தோற்றம்

இக் கட்டடத்தின் அடித்தள மண்டபம் லண்டனில் வசிக்கும் மருதனார் மடத்தைச் சேர்ந்த இசை வித்தகி திருமதி சிவசக்தி சிவனேசனின் நிதியுதவியுடனும் முதலாவது மாடி இலண்டனில் வசிக்கும் கொட்டடியைச் சேர்ந்த கா. விஜானந்தன் குடும்பத்தினரின் நிதியுதவியுடனும் இரண்டாவது மாடி அமெரிக்கா புளோறிடாவில் வசிக்கும் சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி க.தேவகாந்தன் குடும்பத்தினரது நிதியுதவியுடனும் அமைக்கப்பட்டுள்ளன.

கட்டட முன்றிலில் அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் கைலாசபிள்ளை விநாயகர் ஆலயம் ஒன்றையும் அமைத்துக் கொடுத்துள்ளார்.


(ஐ-173-203)

## நாளை

பங்குனி 30
வியாழக்கிழமை
13.04.2006
திதி: பூரணை
முன்னிரவு : 10.26 வரை
நட்சத்திரம் : அத்தம்
முற்பகல் : 10.03 வரை
சுபநேரம் : 07.36 - 09.06
ராகுகாலம் : 01.36 - 03.06
(யாவும் பழைய நேரப்படி)

## உதவாக்கு

வானில் நட்சத்திரங்களைப் பார்த்து உன் கப்பலை செலுத்து. ஆனால், கீழே மணல் திட்டுகள் இருக்கும் மறந்துவிடாதே. -சி.எச்.ஸ்பேர்ஜியன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியரான திருமதி பத்மநாபன் ஜெயகுமாரி அவர்களின் அன்புக் கணவர்

**பத்மநாபன்**

(சிறுவர் திட்ட முகாமையாளர், கியூடெக்)

அவர்கள் அகால மரணமடைந்த செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள்
மக்கள் வங்கி, பிரதான வீதிக் கிளை,
உரும்பிராய் நீடித்த கருமபீடம்.

(49378) (25-34-15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 23 . 09 . 1933



இறப்பு 10 . 03 . 2006

**அமரர் ப.சொக்கலிங்கம்**
(விதானையார், ஓய்வுபெற்ற கிராமசேவகர் - இல. 45, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்)

ப.சொக்கலிங்கம் (விதானையார்) அவர்கள் கடந்த 10.03.2006 வெள்ளிக்கிழமை திருச்சியில் (இந்தியா) காலமானார். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 09.04.2006 ஞாயிற்றுக்கிழமை (காலை 7.00-9.00 இற்குள்) திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத்தில் நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

குடும்பத்தினர்.

*தகவல்: S. கோபிநாத் (மகன்)*
*No:7,8 ஆவது கிராஸ், அம்மையப்ப நகர்,*
*வயலூர் மெயின் ரோடு, திருச்சி - 6200017*
*தமிழ்நாடு, தென்னிந்தியா. Ph:00914 312781030*

(சி-48918) (25-34-15)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம் 23 . 03 . 1940*



*மறைவு 17 . 03 . 2003*

**அமரர் முத்துக்குமாரு மயில்வாகனம்**
**(கிராம சேவையாளர் J/96)**

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஓடி வருவீர்களா
உறவாட எம்மோடு

(49370) (25-34-15)

*5/5, அருளம்பலம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## நெஞ்சைவிட்டு நீங்கா நினைவில் நிற்பவர்கள்

8ஆம் ஆண்டு



**சின்னராசா சிவாகரன்**
திதி:சதுர்த்தி
(அம்பாள் ஸ்ரோஸ் உரிமையாளர்)
**மண்ணில்: 04.11.1971**
**விண்ணில்: 29.03.1999**

15 ஆம் ஆண்டு



**சின்னராசா கிருபாகரன்**
திதி: சதமி
**மண்ணில்: 24.07.1975**
**விண்ணில்: 27.04.1992**

*நீர் மேவும் ஆனையூர் பெற்றெடுத்த தவச் செல்வீர்*
*சிறப்புடைய தன் மக்கள் போற்ற வாழ்ந்தீர்*
*பிறர் போற்றும் நல்லறங்கள் பலவுஞ் செய்தே*
*பண்பாளர் பசித்தோர்கள் துயர் துடைத்தீர்*
*நேர் கொண்டு உமதன்பை என்றும் பெற்ற*
*உமதன்பு சகோதரிகள் அம்மா அப்பா*
*சீர் அற்ற உமது வாழ்வின் முடிவைக் கண்டு*
*சிறகொடிந்த பறவைகளாய் வாழ்கின்றோம்.*

*பிடாரி அம்மன் கோயிலடி,*
*ஆனைக்கோட்டை.*

என்றும் உங்கள் நினைவில்:
உறவுகள்.

(சி-48913) (25-34-15)

## காணிப்பதிவு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.12

'யு.என். கபிற்றாட் நிறுவன (ஐக்கிய நாடுகள் வதிவிட நிறுவன) அனுசரணையுடன் சமூக அபிவிருத்தி சபை மட்டத்திலான காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கருத்தரங்குகள், யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட மக்கள் குழுக்களுக்கு கடந்த 8ஆம், 9ஆம் திகதிகளில் நடத்தப்பட்டன.

இதில் காணிப் பதிவகத்தின் தற்போதைய நிலை, காணி உறுதி என்றால் என்ன? காணிப் பதிவேடுகள் பற்றிய விளக்கம், உறுதி வகைகள், உறுதிகள் இல்லாவிட்டால் என்ன செய்வது, அழிந்துபோன ஆவணங்களை உருவாக்குதல், அரச காணி வழங்கல், பதிவு செய்தல், கைமாற்றுதல் முதலான பல்வேறு விடயங்களை யாழ்.வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் கருத்தரங்கில் தெளிவுறுத்தினார். (ஐ-204-202)(25)

## இரு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.12

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தால் இரண்டு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன.

ஆழ்வார் அருளிய பாசுரங்களிலிருந்து தொகுக்கப்பட்ட சகல காரிய சித்திதரும் திருமால் திருப்பாசுரங்கள் எனும் நூலும் -

விஷ்ணு நாமார்சனா மஞ்சரி எனும் நூலுமே வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன. (ஐ-203) (25)

## சேவை நலன் பாராட்டு



**திருமதி சாவித்திரி இராசரத்தினம்**
(உப தபாலதிபர், சண்டிலிப்பாய்)

*எமது சண்டிலிப்பாய் உப தபாலகத்தில் 02.05.1970 தொடக்கம் உப தபாலதிபராக திறமையாக பெரும் பணியாற்றி, 12.04.2006 இல் ஓய்வுபெறும் இவர் குடும்பத்துடன் நலமுடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.*

(49351) (25-34-15)

*உப தபாலகம், சண்டிலிப்பாய்.*

உப தபாலதிபரும்
தபால் ஊழியர்களும்.


## புது வருடப் பிறப்பை முன்னிட்டு

மகா சில்க்ஸ் இன் மாபெரும் மலிவு விற்பனை

(மகாசில்க்ஸில் மட்டும்)

மகாசில்க்ஸ்
32, 40A, நவீனசந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
T.P: 7359



கிளை நிறுவனங்கள்

பியூட்டி சில்க்ஸ்
69, நவீனசந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

ஹவுஸ் ஒவ் செலெக்ஷன்
75 B, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்.

## Diploma in Hardware Engineering

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற.

**Course Contents :-**
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்.
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம். (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்.
- Software, Operating system இன்ஸ்ரோல் செய்தல்.
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Driver CD
வகுப்புக்கள் ஆரம்பம் :-
17/04/2006 :- 08.30

**Hardware பயிற்சி**
- கணனிப் பாகங்களை இனம்காணும் முறை.
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Trouble Shooting & Maintenance.

**Software பயிற்சி**
- Operating System நிறுவும் முறை (Windows 98 & Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை. (Sound Card, Modem, VGA, TV Card, Printer)
- Trouble Shooting (File updating, Copying)

## Diploma in Computerized Accounting

**ACCPAC + Quickbooks premier + MYOB**

ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

*Course Contents:-*
Introduction to Computer
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore casting
Business Planing
Internet & e-mail

One week

யாருக்கு:
கணக்கியல் துறையில் (அரச,தனியார்,NGO) வேலைசெய்துகொண்டிருப்போருக்கும், வெளிநாட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கும், பல்கலைக்கழக, உயர்தொழினுட்ப கல்லூரி மாணவர்களிற்கும், கணக்கியல் துறையில் கற்றுக்கொண்டிருப்போர் அனைவரிற்கும்.

Course Fee:-
~~17500~~ 3500

**கற்கைநெறியின் நன்மைகள் :-**
- பாடநெறியின் இறுதியில் 100% பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்
- கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
17/04/2006

ஏனைய அனைத்துக் கணனிக் கற்கைநெறிகளிற்கான புதியபிரிவுகள் 15ம்,16ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது.

*Morning Batch :- 10.30-11.30*
*Evening Batch :- 03.00-04.00*

80% Off

... விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புங்குடுதீவு கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்





# தேர்த்திருவிழா-சிறப்புமலர் - 12.04.2006

## சௌபாக்கியங்கள் அருள்பவன்



இந்துமாகடல் நடுவே முக்கனிகளில் மேலான மாங்கனி வடிவில் சிறந்து விளங்குகின்ற இலங்காபுரியின் வடபால் சைவமும் தமிழும் பொலிந்து விளங்குகின்ற யாழ்ப்பாணப் பட்டினத்தின் தென்மேற்கே திகழ்கின்ற செல்வம் மிக்க வணிகர்கள் உறைகின்ற புங்குடுதீவின் கிழக்கே அமைந்துள்ள கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் அருள் விளங்கும் ஆனை முகக் கடவுளாக சகல சௌபாக்கியங்களையும் வாரி வழங்கிக் கொண்டிருக்கும் திவ்விய திருத்தலமாகும்.

இவ்வாலயத்தின் பார்த்திப வருட மஹோற்சவம் 04-04-2006 செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. அதில் ரத உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

குருபக்தியும் இறைபக்தியும் மிக்க புங்குடுதீவு வாழ் பெருமக்களாலும் கிராமத்தில் இந்துசமய கலாசாரத்தின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட இந்து இளைஞர்களின் முழுமையான முயற்சியாலும் இந்தவருடம், பாடல்பெற்ற பெரும் பதியாம் திருக்கேதீஸ்வர தேவஸ்தான நித்திய சிவாச்சாரியார் சிவாச்சார்யமணி சிவஸ்ரீ தியாக கருணானந்தக் குருக்கள் (கண்ணன்) அவர்களின் தலைமையில் ஆகம பிரவீணா நயினை கயிலை வாமதேவக்குருக்கள் அவர்களின் வழிகாட்டலில் நடைபெறும் மஹோற்சவம் 13.04.2006 அன்று தீர்த்த உற்சவம் (கொடியிறக்கம்) 14.04.2006 பிராச்சித்தாபிசேகம் ஆகியவையும் 15.04.2006 சனிக்கிழமை வைரவர் பொங்கலுடன் நிறைவுபெறவுள்ளன. மஹோற்சவ விழா சிறப்புற்று எல்லோரும் எம் பெருமானின் பேரருளைப் பெற்று உய்ய வேண்டி பிரதீட்சா திலகம் சிவஸ்ரீ பஞ்சாட்சர பாலசுப்பிரமணியக் குருக்கள் (திருக்கேதீஸ்வரம்) சிவாகம பூஷணம் சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஸ்ணராஜக்குருக்கள் (கனடா) சிவாச்சார்ய கலாநிதி சிவாச்சாரிய குலபூஷணம் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் (ஐயா மணி கனடா) ஆகமப் பிரவீணா சிவஸ்ரீ கயிலைவாமதேவக் குருக்கள் (நயினாதீவு) ஆகியோர் தங்களது நல்லாசிகளை வழங்குகின்றனர்.

திருவும் கல்வியும் சீரும் சிறப்பும் உன் திருவடி புகழ்பாடும் திறமும் நல் உருவும் சீலமும் ஊக்கமும் தாழ்வுறா உணர்வும் தந்தெனது உள்ளத்தவர் குருவும் தெய்வமுமாகி அன்பர் தம் குறைதவிர்க்கும்குணப்பெருங்குன்றலே வெருவும் சிந்தை கஜனைம் விளங்கும் கலட்டி வரசித்தி விநாயக வள்ளலே.

**ஸ்ரீ தியாகராஜா ஐயர், கருணானந்த சர்மா,**
ஸ்ரீமுனீஸ்வரன் கோயில், 97/06, குருணாகலை வீதி, சிலாவ.

(24)

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



தனக்குமேல் வேறு தலைவன் இல்லாதபடியால் விநாயகர் என்றும் கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்குகின்ற தன்மையினால் கணபதி என்றும் விக்கினங்களை எல்லாம் நீக்குகின்றவர் ஆனபடியால் விக்கினேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகின்ற பிள்ளையார் பெருமான் புங்குடுதீவு என்னும் பதியில் அழகாக அமர்ந்து வீற்றிருந்து வரங்களையும் சித்திகளையும் அருளி வரசித்தி விநாயகராக அருள்பாலித்து வருகின்றார்.

இன்று அவருக்குத் தேர்த்திருவிழா.

தம்மை வழிபடும் அடியார்களுக்குத் துன்பங்களையும் துயரங்களையும் நீக்கி இன்னல்களையும் இடுக்கண்களையும் போக்கி அருள்மாரி பொழியும் பெருமான் இன்று ரதமேறி வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுக்கின்றார்; இது நாம் செய்த பாக்கியம்.

மஹோற்சவத்தில் இந்த ரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். எனவே, வரசித்தி விநாயகர் இன்று பாவங்களையும் தொல்லைகளையும் துன்ப, துயரங்களையும் அழித்தொழிப்பதற்காகத் தேர் மீது இவர்ந்து புறப்படுகின்றார்; அந்த அழகே தனி.

அழக்குத் தேரேறி அற்புதக் காட்சி தரும் வரசித்தி விநாயகர் அடியார் பெருமக்களுக்கு நோயற்ற நல்வாழ்வையும் சகல சௌபாக்கியங்களும் நிறைந்த புதுவாழ்வையும் நல்க வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

பிறக்கப்போகும் புத்தாண்டு முதல் சகல மக்களுக்கும் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் இன்ப வாழ்வையும் அளிக்க எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் போற்றிப் பணிவோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.


விழா சிறப்புற வாழ்த்துவோர்:

Prop.: S.T.Selvakumaran

**R.S.T.S.ENGINEERS**

CIVIL, MECHANICAL & ELECTRICAL ENGINEERS
& GOVT CONTRACTORS

03, Aananthapuram, A-9 Road, Kilinochchi.
Mobile No.: 0776 - 055458, E-mail: stselva @ lankabellnet.com.


## சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P V Computer உடனடியாக விற்பனைக்குண்டு. 2 மாத பாவனை Pro - Int P4 2.8 LGA Ram - 256 H.D 80GB. தொடர்பு: 0779184529 (49366)

புதிய Hero Honda CBZ மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு 0777252041. (49227)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம்.(Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48914)

### மணமகள்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 71, 73, 76 ஆம் ஆண்டு டாக்டர், பட்டதாரி மணமகன்மாருக்கு (செவ்வாயுள்ள மணமகன்) பட்டதாரி மணமகள்கள் தேவை. தொடர்பு: K.சுந்தர், 'திருப்பதி கிரி', கனகசபை வீதி, மானிப்பாய். (49210)

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 69,72, 73,74,75,76, 77 ஆம் ஆண்டு, அரச உத்தியோகம் மணமகன்களுக்கும் 69,72, 73,75, 76,77ஆம் ஆண்டு, லண்டன், பிரான்ஸ் நோர்வே P.R. உள்ள மணமகன்களுக்கும் பட்டதாரி மணமகள்கள் தேவை. தொடர்பு: K.சுந்தர், 'திருப்பதி கிரி', கனகசபை வீதி, மானிப்பாய். (44210)

### வீடு வாடகைக்கு

வேலணை, வங்களாவடி பிரதேச செயலகத்திற்கு பின்புறமாக பிரதான வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகப் பாவனைக்கு உகந்தது.

தொடர்பு:
T.P. 0777 145255
0777 152330

(49353) (21.15.16)

### தேவை

G.C.E. A/L கணித அல்லது உயிரியல் பிரிவில் படித்த கொம்பியூட்டரில் ஆங்கில, தமிழ் வினாத்தாள் Typing செய்யக்கூடிய பெண் ஊழியர் உடன் தேவை.

தொடர்பு:

**English Medium Classes**
**Raveens - Karaveddy.**
021 - 226 3321

(சி-48777)


### மின்தாக்கி யுவதி காயம்

மின்சாரம் தாக்கியதில் யுவதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் புங்குடு தீவு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த எம். புவிதா (வயது - 16) என்பவரே படுகாயமடைந்தவராவர். (ஐ-14)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலிகாமம் கல்வி வலயத்தில்
உடற்கல்வி ஆசிரிய ஆலோசகராகக்
கடமையாற்றிய

**திரு.மு.லோகநாதன்**

தற்போது தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றதையிட்டு பாராட்டுவதோடு மேன்மேலும் அவரது சேவையும் வழிகாட்டலும் தொடர வாழ்த்துகின்றோம்.

*பழைய தபாற்கந்தோர் வீதி,*
*சங்கானை.* (49365) (25.21,15.16)

**தில்லைராஜன் குடும்பம்,**
**திருமதி பராசக்தி**
**சிவானந்தம் குடும்பம்.**

உ

வண்ணார்பண்ணை, காட்டுத்துறை

### அருள்மிகு பகவதி மாரியம்மன் கோயில் அலங்கார உற்சவம் - 2006

14.04.2006 - வெள்ளிக்கிழமை ஆரம்பம்
தினமும் மாலை 6 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், அலங்கார பூசை, அம்பாள் வீதியுலா வருதல்.

19.04.2006 - புதன்கிழமை - மாலை 7 மணி
தண்டிகைத் திருவிழா.

23.04.2006 - ஞாயிற்றுக்கிழமை பகல் அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் மாலை 7 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் தெரு வீதி உலாவரும் உற்சவம் நடைபெறும்.

அடியார்கள் வருக! அருள்பெறுக!

(49194)(21.15.16) - தேவஸ்தானம்.

### 31 ஆம் நாள் நினைவு கூருகிறோம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1917 - 03 - 12 | 2006 - 03 - 13 |

**வேலுப்பிள்ளை இராசம்மா**

திதி: சதுர்த்தி

*அன்புச் சிறகடித்து வாழ்வின் மத்தியில்*
*இன்பத் தென்றலாய் இனிமை சொரிந்த அம்மாவே!*
*உனது மக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்*
*உனது பிரிவால் ஏங்கித் தவிக்கின்றனர்*
*புன்னகை பூத்திட்ட உன் முகம் மறைவால்*
*வழிந்தோடும் கண்ணீரைக் காலமெல்லாம்*
*காணிக்கையாக்கிடுவோம் அம்மா.*

இலங்கைநாயகி அம்மன்கோயிலடி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
(49367)(21.16.15)

உம் பிரிவால் நெஞ்சம்
துயருற்றிருக்கும்:
குடும்பத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1983 . 01 . 28 | 2006 . 04 . 10 |

**இராசேந்திரம் சுமணன்**

*நீ எமக்கு விடை*
*கொடுப்பாயென்று*
*நிந்தையில் உன்*
*வதனம் கண்டு*
*சிந்தை பொறுக்கவில்லை*
*நண்பா!!!*

*சுமணா!!!*
*உனக்கு வந்ததோ மரணம்*
*இடிபோல காதில்*
*இரைந்த சேதியால்*
*எமக்கு கண்ணீர்தான்*
*அறுவடை!*

உனது பிரிவால் துயருறும் உறவுகள்
**சாந்தியகத்தின் உத்தியோகத்தர்கள்.**

(49352) (25.21.16.15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
04 - 07 - 1951



மறைவு
13 - 03 - 2006

## திருமதி யோகம் தங்கம் (எலிசபேத்)

எம்மை தோளிலும் மார்பிலும் தூக்கி
பாசத்தை எமக்குக் காட்டி
அன்புடன் அரவணைத்த அம்மம்மா!
நீங்கள் எம்மை விட்டு நீங்கி முப்பத்தொரு நாளாகியதே
எம் நெஞ்சில் வேரூன்றிய
உங்கள் நினைவுகள் என்றுமே நீங்காதே!

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்:
பேரப்பிள்ளைகள்.
J.எப்சிபா (பேர்த்தி).

62/1, டேவிட் றோட்,
யாழ்ப்பாணம். (49226)(32-16-34)

---

### வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு லிகிதர், விற்பனையாளர் ஆகிய வேலைகளுக்கு ஆள்கள் தேவை. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது.
15.04.2006 இற்கு முன் நேரில் சமுகம் தரவும்.
தொடர்பு: தரன் வணிக நிலையம்
130, 132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

## புதிய பிரிவுகள்

பிரிவு I :14.04.2006
பிரிவு II :15.04.2006
பகல் 10.00 மணி

அனைத்து Diploma
கற்கை நெறிகளுக்குமான வார,
வாரஇறுதிநாள் பிரிவுகள்
ஆரம்பமாக உள்ளன என்பதை
அறியத்தருகின்றோம்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

(சி/48788)

---

# மலிவு விற்பனை

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தில்
புதுவருடத்தை முன்னிட்டு மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| * கொட்டன் சாறி | ~~600~~/= | 350/= |
| சாறி வகைகள் | ~~750~~/= | 450/= |
| சாறி வகைகள் | ~~1000~~/= | 500/= |
| சாறி வகைகள் | ~~1100~~/= | 600/= |
| சாறி வகைகள் | ~~1250~~/= | 700/= |
| சாறி வகைகள் | ~~1500~~/= | 750/= |
| * பஞ்சாபி வகைகள் 32,34,36 | ~~850~~/= ~~900~~/= ~~950~~/= | 600/= |

மேலும் அனைத்து புடைவை வகைகளும்
மலிவு விலையில் விற்பனையாகின்றது.

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2985

(49202)(26.11.16)

---

ஸ்ரீ ராம ஜெயம்

# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

இன்று (12-04-2006) புதன்கிழமை காலை 8.30 - 10.30 மணிவரையுள்ள
சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

இன்று முதல் 22 கரட்
தங்க நகைகளுக்கு
நாடவேண்டிய ஸ்தாபனம்

## கிருஷ்ணா நகை மாளிகை

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 - 222 5046



எனும் புதுக்கடையை ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் தங்கள் குடும்ப சகிதம் வந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்:
ஏ.எஸ்.சுரேந்திரன் குடும்பத்தினர்.

கிருஷ்ணா அடைவு கடை,
370, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

(49212)
(23.32.16.34)

---




NSB
அவுருது வாசனா
Avurudu Vasana

## இப் புதுவருடத்தில் சேமித்தால் கை நிறைய பரிசுகள்

- ஏப்பிரல் 14ம் திகதி முதல் 30ம் திகதி வரை ரூபா.10,000/- அல்லது அதற்கு கூடிய அளவில் அவுருது வாசனா சான்றிதழ்களை கொள்வனவு செய்யும் உங்களுக்கு அழகிய பயணப் பொதி அல்லது பாடசாலை பை ஒன்று இலவசம்!
- அச்சான்றிதழ்களை மாற்றாமல் 2006 டிசம்பர் 31ம் திகதி வரை வைத்திருந்தால் இறுதி சீட்டிழுப்பில் வெற்றி பெறும் 500 அதிஷ்டசாலிகளுக்கு ரூபா. 5,000/- வீதம் பரிசுகள்!

அது மட்டுமல்ல,

- 14ம் திகதி புது வருட தினத்தில் எந்தவொரு சேமிப்பு அல்லது நிலையான வைப்பு கணக்கில் ரூபா.100,000/- வைப்பு செய்தால் அழகிய பயணப் பொதி அல்லது பாடசாலை பை ஒன்று இலவசம்!
- புது வருட கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏப்பிரல் 14ம் திகதி சகல தேசிய சேமிப்பு வங்கி கிளைகள், அஞ்சல் வங்கி கிளை மற்றும் சேமிப்பு கடைகள் ஆகியவை மு.ப. 8.00 முதல் பி.ப. 1.00 வரை திறந்திருக்கும். அன்றைய தினம் கொடுக்கல் வாங்கல் செய்யும் சகலருக்கும் புது வருட பரிசு உரித்தாகும்.

இவையனைத்தும் இந்த புது வருடத்தில் NSB அவுருது வாசனா மூலம் உங்களுக்கே.



மகிழ்ச்சி பொங்கும் புது வருடம்!

NSB
தேசிய சேமிப்பு வங்கி

(சி/48901)

---

# வெளிவந்துவிட்டது..!!!

## ஏப்ரல் மாத இதழ்

தமிழ் சஞ்சிகை உலகில்
புதிய பிரவேசம்




இலங்கையின் ஒரேயொரு மாதாந்த
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

## தமிழ் PCTIMES

தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

2006 மார்ச் முதல் மாதாந்தம் வெளிவருகிறது
இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும்!

புதிய

- தகவல்கள்
- செய்திகள்
- மென்பொருள் (SoftWare)
- வன்பொருள் (HardWare)
- செய்முறைகள்
- செயற்பாடுகள்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

விஜய் பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு.

(சி/48727)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெகிழ் பொலித்தீன் பைகளில் கழிவுகளை இறுதியகற்றும் நடவடிக்கை அதிதீவிரம்

## தமிழீழ சுகாதார சேவைகள் பணியகம் அறிவிப்பு

கிளிநொச்சி,ஏப்.12

நெகிழக்கூடிய பொலித்தீன் பைகளில் திண்மக் கழிவுகளைச் சேர்த்து இறுதியகற்றும் நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளப்படுவதாக தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகம் அறிவித்துள்ளது.

கழிவுகளை அகற்றுவதில் காணப்பட்ட சிரமங்களைக் கவனத்தில் கொண்டு தமிழீழ சுகாதார சேவையினரும் கரைச்சிப் பிரதேச சபையினரும் இணைந்து இறுதியகற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் தீவிரமாக்கப்பட்டுள்ள இறுதியகற்றல் நடைமுறையில் வியாபார நிலைய உரிமையாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து சுகாதார சேவையினர் விடுத்துள்ள அறிவுறுத்தல்கள் வருமாறு:-

✸ உக்கும் தன்மையுடைய கழிவுகளுக்கு கறுப்புநிறப் பொலித்தீன் பைகளும் உக்காத தன்மையுடைய பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளுக்கு நீலநிறப் பொலித்தீன் பைகளும் பயன்படுத்தப்படும். எக்காரணம் கொண்டும் உக்காத பொருள்களை, உக்கும் பொருள்களுடன் சேர்த்து சேகரிக்கவேண்டாம். உணவு மற்றும் உக்கும் கழிவுகளைப் பொலித்தீன், பிளாஸ்ரிக் கொள்கலன்களைச் சேர்த்து பொதி செய்யவேண்டாம்.

✸ வாரம் ஒருமுறை இறுதியகற்றப்படும் மட்டைகள், பெட்டிகள், வெற்றிலைத்தட்டு, வாழைத்தண்டு, சருகு என்பன மடிக்கப்பட்டு புறம்பாகக் கட்டிவைக்கப்பட வேண்டும். மயிர்கள் மஞ்சள் நிறப்பைகளில் சேரிக்கப்படல் வேண்டும்.

✸ தங்கள் நிலையத்தின் திண்மக் கழிவின் தன்மை, திண்மக்கழிவு அளவிற்கேற்ப நெகிழக்கூடிய பொலித்தீன் பைகளை 6 ரூபா செலுத்திப் பிரதேச சபை அலுவலகத்தில் அல்லது வர்த்தக சங்கத்திடம் பெற்றுக் கொள்ளமுடியும்.

✸ நெகிழ்தன்மை திண்மக் கழிவுகள் அகற்றும் பொலித்தீன் பைகள் நடைமுறைப் படுத்தும் நாளிலிருந்து சகல வர்த்தக உரிமையாளர்களும் ஒரே நடைமுறையைப் பின்பற்றி திண்மக் கழிவுகளைத் தாங்களே சேகரித்து வாய்ப்பகுதி கட்டப்பட்ட நிலையில் தினமும் காலை 6 மணிக்கு வர்த்தக நிலையங்களின் முன்பக்கத்தில் வைக்கப்படல் வேண்டும். இவை முற்பகல் 10 மணிக்கிடையில் பிரதேச சபையின் தொழிலாளர்களால் அகற்றப்படும்.

✸ வியாபார நிலையங்களில் நெகிழ்தன்மை பொலித்தீனில் நிரப்பப்பட்ட கழிவுகள் பிரதேச சபைத் தொழிலாளர்கள் இறுதியகற்றல் வாகனத்திற்கு எடுப்பதற்கேற்ற வகையில் அடையாளப்படுத்தி வைக்கப்படல் வேண்டும்.

✸ இந்த நடைமுறை அமுல்படுத்திய பின்னர் திண்மக் கழிவுகளை நிலையத்தின் முன்பகுதி, பின்பகுதிகளில் குவித்தல், நீரோட்டக் கால்வாய்களில் சேர்த்தல், நிலைய முன்பகுதி, பின்பகுதிகளில் எரித்தல் தவிர்க்கப்படல் வேண்டும். தங்கள் வியாபார நிலைய முன்பகுதி, பின்பகுதிகளில் ஒதுக்கப்படும் கழிவுகள் தங்கள் கழிவுகளாகவே கருதப்படும். தங்கள் நிலையச் சூழலை சுத்தமாகப் பேணுவது தங்கள் கடமையாகும்.

✸ திண்மக்கழிவகற்றல் முறையை நடைமுறைப்படுத்தும் பிரதேச சபை, சுகாதார உத்தியோகத்தர்கள், வர்த்தகர் சங்கம் ஆகியோருக்கு ஒத்துழைப்பை வழங்கி எமக்கே சேவை செய்கின்றார்கள் என்ற உணர்வுடன் ஒத்துழைத்தல் வேண்டும்.

✸ திண்மக் கழிவகற்றல் முறையை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள், சிரமங்கள் ஏற்படின் தமிழீழ சுகாதார சேவைகள்; பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் தொடர்புகொண்டு தெளிவைப்பெற்று செயற்படவும்.

✸ மேற்படி நடைமுறைகள் மீறப்பட்டு திண்மக்கழிவுகள் நகர சுற்றாடற் சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தத்தக்க வகையில் செயற்படும் வியாபார நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஒ-202)(24)




## வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்ட பயிற்றுவிப்பாளருக்குப் பயிற்சி

கிளிநொச்சி,ஏப்.12

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டப் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நெறி கடந்த வாரம் கரைச்சிப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்துடன் தொடர்புடைய தகவல், கல்வித் தொடர்பாடல், பொறியியல், சுற்றாடல் பாதுகாப்பு, தகவல் கல்விக்கும் தொடர்பாடலுக்குமான ஆலோசகர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கிய மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்:-

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாம் கட்ட வீடமைப்பு பெருமளவு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாண்டில் ஆயிரத்து 500 வீடுகளை இம்மாவட்டத்தில் அமைக்க உலக வங்கி முன்வந்துள்ளது.

எனவே, ஏனைய கட்டத் திட்டங்களையும் விரைவாக செய்துமுடிக்கவேண்டும் - என்றார்.

(ஒ-203) (24)

## அக்கராயன் பாடசாலை வீதியை தார் ஊற்றிச் செப்பனிடக் கோரிக்கை

அக்கராயன்,ஏப்.12

அக்கராயன் சந்தி தொடக்கம் ஸ்கந்தபுரம் சந்தி வரையான ஒன்றரைக் கிலோமீற்றர் தூர வீதிக்குத் தார் ஊற்றிப் புனரமைக்குமாறு கோரி அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் கிளிநொச்சி அரச அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பாடசாலையின் முன்பாக உள்ள வீதியில் நாள்தோறும் 50 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பயணம் செய்கின்றன.

எமது பாடசாலையில் ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

தூசி கிளப்பியபடி பயணிக்கும் ஊர்திகளினால். மாணவர்கள், ஆசிரியர்கள் புழுதி படிந்தே பாடசாலைக்கு வரநேரிடுகிறது.

இந்த அசௌகரியங்களைக் கருத்திற் கொண்டு எமதுபாடசாலைக்கு முன் உள்ள வீதியைத் தார் ஊற்றிச் செப்பனிடத் தங்களின் உதவியைக் கோருகிறோம்.

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-420) (24)

## முல்லைத்தீவில் அடகுச் சேவை

புதுக்குடியிருப்பு,ஏப்.12

இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக் கிளையில் அடகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'ரண் சுரக்கும்' அடகுச் சேவையைக் கடந்த 3ஆம் திகதி உதவி முகாமையாளர் பி.எ.அருமைநாயகம் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைத்தார்.

இந்த நிகழ்வில் வன்னிப் பிராந்திய முகாமையாளர் ச.திருச்செல்வம் மற்றும் வாடிக்கையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை வங்கியில் முதற்தடவையாக இந்த அடகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-353-202) (24)

## நினைவுத்தூபி திறப்பு

அக்கராயன்,ஏப்.12

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இலங்கை - இந்தியப் படைகளினால் படுகொலை செய்யப்பட்ட மக்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி அன்னை பூபதி நினைவு தினக் கடைசி நாளான எதிர்வரும் 19 ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

அன்று இரவு ஸ்கந்தபுரம் டானியல் அரங்கில் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஒ-420) (24)



முழங்காவில் பிரதேசத்தில் நடைபெற்ற தற்காப்புப் பயிற்சி நிறைவு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் தமிழீழ அரசியல் துறை துணைப் [illegible] ஏற்றுவதை முதலாவது படத்திலும் - அணிவகுப்பு நிகழ்வை இரண்டாவது [illegible] காணலாம்.
(படங்கள்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்குச் சேமிப்புக் கணக்கு

மல்லாவி,ஏப்.12

மல்லாவி வர்த்தகர் சங்கம், வறிய மாணவர்களுக்கு உதவும் நோக்குடனும் மாணவர் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையிலும் 50 மாணவர்களுக்குச் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்துக் கொடுத்துள்ளது.

மல்லாவி மத்திய கல்லூரியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு தமிழீழ வைப்பகத்தின் 'அமுதம்' தேட்டக் கணக்கில் தலா 400 ரூபா வீதம் வைப்பில் இடப்பட்டு கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 23ஆம் திகதி மல்லாவி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற தமிழீழ வைப்பகத்தின் ''பள்ளிச் சேமிப்பு அலகு'' திறப்பு விழாவின் போது இந்தக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களுக்குச் சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-322-203)(24)

## மரக்கன்றுகள் விநியோகம்

ஸ்கந்தபுரம்,ஏப்.12

முட்கொம்பன், மணியங்குளம், விநாயகர் குடியிருப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த 60 குடும்பங்களுக்குப் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் 'ஒக்ஸ்பாம்' நிறுவன உதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் இந்தப் பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

பலா, தேசி,தோடை, கமுகு, மாதுளை போன்ற மரக்கன்றுகளே வழங்கப்பட்டுள்ளன. (ஒ-381-203)(24)

## முல்லைத்தீவு வலய அதிபர்களுக்கு!

கிளிநொச்சி,ஏப்.12

முல்லைத்தீவு வலயப் பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்களுக்கான முழுப் பண்புசார் முகாமைத்துவத்தைப் பாடசாலைகளில் உறுதிப்படுத்துவதற்கான செயலமர்வு எதிர்வரும் 16,17,18ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 160 பங்குபற்றுநர்களுக்கு இரு குழுக்களாகச் செயலமர்வு நடத்தப்படும்.

பங்குபற்றுநர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு முல்லைத்தீவு வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-14) (24)

## பணியாளர்கள் கௌரவிப்பு

ஸ்கந்தபுரம்,ஏப்.12

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம், 'நெக்ரோ' ஆகிய இரு நிறுவனங்களின் பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.

நிறுவன நிர்வாகத் தலைவர் மு.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பணியாளர்களுக்கு அன்பளிப்புப் பொருள்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் செ.ஸீசர், மாவட்ட இணைப்பாளர் இ.ராஜன், அக்கராயன் பிரதேச உதவிப் பணிப்பாளர், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைத் தலைவர்கள், கிராம அலுவலர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-381-203) (24)

## விநாயகர் குடியிருப்பில் வீடமைப்புத் திட்டம்

ஸ்கந்தபுரம்,ஏப்.12

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் 'சோஆ' நிறுவன உதவியுடனும் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் விநாயகர் குடியிருப்பு மக்களுக்கென வீடமைப்புத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 55 குடும்பங்களுக்கு 27 ஆயிரம் ரூபா பெறுமதியான மரங்கள், தகரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், ஒரு குடும்பத்திற்கு 10 சிமெந்துப் பைக்கற்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக வழங்கப்பட்ட பொருள்களுக்கான வேலைகள் யாவும் பூர்த்தி செய்து முடிக்கப்பட்டதும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-381-203) (24)

# மதுசாலைகளை மூடும்படி கோரி குருநகர்ப் பகுதி மக்கள் பேரணி

## யாழ். செயலகத்தில் மகஜரும் கையளிப்பு

குருநகர்,ஏப்.12

குருநகர் குடியிருப்புகளின் மத்தியில் திடீரென மதுபானசாலைகள் மற்றும் கள்ளச் சாராய விற்பனை நிலையங்கள் அதிகரித்துள்ளன என்றும் -

குருநகர் மக்களின் எதிர்கால நலனை முன்னிட்டு உடனடியாக அவற்றை மூட நடவடிக்கை எடுக்குமாறும் -

கோரும் மகஜர் கடந்த வெள்ளிக்கிழமை குருநகர் மக்களால் யாழ். செயலகத்தில் வைத்து மேலதிக அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இம்மகஜரைக் கையளிப்பதற்காக குருநகர் மக்கள் யாழ். பிரதான வீதியூடாக மது விலக்கு ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளாரால் தற்போது குருநகரில் முன்னெடுக்கப்பட்டுவரும் மகாஞான ஒடுக்கத்தின் ஓர் அம்சமாக இம்மது விலக்கு ஊர்வலம் நடத்தப்பட்டது.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் முன்றிலில் அமைந்துள்ள குருநகர் கலை அரங்கு முன்பாக இந்த ஊர்வலம் ஆரம்பமாகியது. பாடசாலை மாணவ, மாணவிகள் தமது சீருடைகளுடன் மதுவால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான பதாகைகளைத் தாங்கிச் சென்றனர். இவர்களுடன் குருநகரிலுள்ள இளைஞர், யுவதிகள், முதியவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அருட்சகோதரிகள், குருமார்கள் அணி அணியாக யாழ். செயலகம் நோக்கிச் சென்றனர். அங்கு யாழ். மேலதிக அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வை முன்னிட்டு ஊர்வலம் நடைபெற்ற நேரத்தில் குருநர் பகுதியிலுள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள், குருநகர் மீன்வாடி, சின்னக்கடைப் பொதுச் சந்தை மற்றும் மதுபான விற்பனைச்சாலைகள் யாவும் மூடப்பட்டன. (ஒ-51)(24)

## கும்பாபிஷேகம்

தென்மராட்சி,ஏப்.12

கச்சாய் மஞ்சள்கேணி அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய (புதுஅம்மன்) மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு சுபமுகூர்த்தவேளையில் இடம்பெறும். எண்ணெய்க்காப்பு சாத்துதல் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை இடம்பெற்றது.

பிரதிஸ்டா சிவஸ்ரீ இ.குமாரசுவாமிக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறும். "சக்தி வழிபாடும் கடாட்சமும்" என்னும் பொருள்பற்றி அ.வாசுதேவா சொற்பொழிவு ஆற்றுவார். மண்டலாபிஷேகமும் தொடர்ந்து சங்காபிஷேகம் என்பன இடம்பெறும். (ஐ-122) (24)



நேற்றுமுன்தினம் பிற்பகல் தட்டா தெரு அரசடி வீதியில் ஹன்டர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளான பின்னர் எடுக்கப்பட்ட படம் இது.
(படம்: ஒளிஅதிரன்)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## வீட்டுக் கதவுகளைத் தட்டி அச்சுறுத்திய கொள்ளையர் குழு

வலி.வடக்கு,ஏப்.12

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் உள்ள வீடுகளுக்குள் கடந்த ஞாயிறு இரவு புகுந்த கொள்ளையர் குழு ஒன்று வீடுகளின் கதவுகளைத் தட்டி அங்கு தங்கியிருந்தோரை அச்சுறுத்திச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

திடீரென வளவுகளுக்குள் புகுந்த கொள்ளையர்கள், கதவுகளைத் தட்டியுள்ளனர். இதனையடுத்து, அச்சமடைந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் மின்குமிழ்களை ஒளிர வைத்தும் உரக்கக் கத்தியும் தாம் விழிப்புடன் இருப்பதை வெளிப்படுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வீட்டு வளவுக்குள் புகுந்து கதவுகளைத் தட்டியோர் கறுப்புத் துணியால் தம்மைப் போர்த்தி இருந்ததுடன் கத்தி, வாள், துப்பாக்கி ஆகியவற்றைத் தம்வசம் வைத்திருந்தனர் என வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர். (எ-180) (24)

## ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்கள் ஆலோசகர்களாக நியமனம்

வடமராட்சி,ஏப்.12

கல்வி முகாமைத்துவ பண்புத்தர அபிவிருத்தி நெறிப்படுத்தும் ஆலோசகர்களாக ஏழு சிரேஷ்ட ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்களைக் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த நியமித்துள்ளார்.

இவர்கள் கல்வி நிர்வாக சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களில் கலாநிதி எஸ்.தணிகாசலம்பிள்ளை (யாழ்ப்பாணம்), ஏ.எஸ்.எம். ஹுசைன் (வெலிகம) ஆகிய இருவரும் சிறுபான்மை இனத்தவர்களாவர்.

ஏனையோர் பெரும்பான்மை இனத்தவர்கள். இவர்களுக்குப் பொறுப்பாக எம்.நாணயக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாணப் பாடசாலைகளின் பண்புத் தர அபிவிருத்தியை மேற்கொண்டு அது தொடர்பான ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் கல்வியமைச்சர்களுக்கு இவர்கள் சமர்ப்பிப்பார்கள். கல்வியமைச்சின் கீழ் இவர்கள் பணியாற்றுவார்கள். (ஐ-173) (24)

## உதவி முகாமைக் குரு நியமனம்

வடமராட்சி,ஏப்.12

பருத்தித்துறை, கட்டைவேலி மெடிஸ்த திருச்சபையின் உதவி முகாமைக் குருவாக அருட்திரு அருள்நாதன் மெதடிஸ்த திருச்சபையால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் மட்டக்களப்பில் பணியாற்றியவராவார். முன்னர் உதவி முகாமைக் குருவாகப் பணியாற்றிய அருட் திரு.எஸ்.சதீஷ் மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.(ஐ173)(24)

## வடமராட்சியில் புகையிலை அறுவடை

வடமராட்சி,ஏப்.12

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை அறுவடை சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது.

ஒரு புகையிலைக் கன்று 60 ரூபா முதல் நூறு ரூபா வரை புகையிலையின் விளைச்சலுக்கேற்ப விலை போகிறது.

புகையிலையை உலர்த்தி பதப்படுத்தி விற்பனை செய்யும் புகையிலை வியாபாரிகள் அறுவடை செய்யப்படும் புகையிலையைக் கொள்வனவு செய்து உலர்த்த ஆரம்பித்துள்ளனர். (ஐ-173) (24)

## வீடமைப்புக் கொடுப்பனவு

தென்மராட்சி கிழக்கு,ஏப்.12

வரணி வடக்கு குறண்பிட்டிக் கிராமத்தில் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்ட பயனாளிகளுக்கான முதலாவது கட்டக் கொடுப்பனவு கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. சுமார் 25 குடும்பங்களுக்கு ரூபா 25ஆயிரம் வீதம் இக்கொடுப்பனவு கொடிகாமம் கூட்டுறவுக் கிராமிய வங்கி மூலம் கொடுக்கப்பட்டது. (ஒ-122)(32)

# பருத்தித்துறை - யாழ்ப்பாணம் இடையே கடுகதி பஸ் சேவை ஆரம்பிக்கக் கோரிக்கை

வடமராட்சி,ஏப்.12

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணத்துக்குக் கடுகதி பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ நிர்வாகிகளிடம் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் இதே பாதையில் மணித்தியாலயத்திற்கு ஒரு கடுகதி பஸ் வண்டி பருத்தித்துறையிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் சேவையாற்றி வந்தன.

1997ஆம் ஆண்டுக்குப் பின்னர் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ மீள இயங்கத் தொடங்கி பத்து ஆண்டுகளை எட்டிப்பிடிக்கின்ற வேளையிலும் கடுபதி பஸ் சேவையை ஆரம்பிக்கவில்லை. அரசாங்க, தனியார் ஊழியர்கள், யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றுவரும் நோயாளர்கள், பார்வையாளர்கள் உட்படப் பல்வேறு தரப்பட்ட மக்களின் வசதிகருதி இக்கடுகதி பஸ் சேவையை ஆரம்பிக்கவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் என்ற தனியார் பஸ் சேவை அமைப்பு பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான கடுகதி மினிபஸ் சேவையை நடத்திவருகிறது. இச்சேவையில் ஈடுபடும் மினிபஸ் வண்டிகள் 40 நிமிடத்தில் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்தைச் சென்றடைகின்றன. (ஐ-173) (24)

# சுமார் மூன்றரைக் கோடி ரூபா செலவில் தொண்டைமானாறு தடுப்பணை திருத்தம்

அச்சுவேலி,ஏப்.12

தொண்டைமானாறு கடல் நீரேரித் தடுப்பு அணை சுமார் மூன்றரைக் கோடி ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படுகின்றது.

பாக்குநீரிணையின் கடல் நீரை யாழ். குடாக்கடல் நீரேரியுடன் கலக்கவிடாமல் தடுப்பதற்கும் மழைநீரைத் தேக்கிவைத்து காலத்திற்குக் காலம் கடலுடன் கலக்கச் செய்வதற்கும் தொண்டைமானாறு தடுப்பு அணை பயன்பட்டுவந்தது.

நீண்டகாலத்திற்கு முன்னர் நிறுவப்பட்ட இந்தத் தடுப்பு அணையின் கதவுகள் சிதைவடைந்தன. இதனால், கடல்நீர் தரைப்பகுதிக்குள் நீரேரி வழியாக உள்புகுந்தது. இதனால் யாழ். குடாநாட்டின் நீர்வளம் உவர்த்தன்மை அடைவதோடு நிலவளமும் பாதிக்கப்பட்டு பயிர்ச்செய்கைக்கு உதவாத உவர் நிலமாக மாறிவருகிறது.

தொண்டைமானாறு கடல் நீர் தடுப்பு அணை திருத்தி அமைக்கப்பட்ட பின்னர் கடல்நீர் தரையின் உட்பகுதிக்குள்ளே புகுவது தடுத்து நிறுத்தப்படுவதோடு, குடாநாட்டு மழைநீர் தரைப்பகுதியில் தேக்கப்படுவதன்மூலம் தரையின் உவர்தன்மையும் மாற்றமடையும் என நம்பப்படுகின்றது.

தொண்டைமானாறு கடல்நீர்த் தடுப்பு அணைக் கட்டில் உள்ள 18 கதவுகளில் 5 கதவுகள் இணைப்புச் செய்வதற்கான வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. ஏனைய இடைவெளிக்கும் கதவுகள் இணைப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இதேவேளை, அணைக்கட்டு திருத்த வேலைக்காக மிதவைகள் போடப்பட்டு வரையறை செய்யப்பட்ட எல்லைக்குள் சில மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது வேலைத்திட்டத்திற்கு இடையூறு விளைவிப்பதாக உள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஒ-11) (24)

# காணி இடாப்புகள் தயாரிப்பு

தென்மராட்சி கிழக்கு,ஏப்.12

சாவகச்சேரிப் பிரதேச விவசாய சம்மேளனங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பு நெற்காணி இடாப்புகளைத் தயாரித்து தம்மிடம் கையளிக்கும்படி சாவகச்சேரி கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் வேண்டுகோள் விடுத்துள்ளார். நெற்காணி இடாப்புகள் வேறாகவும் மேட்டுக்காணி இடாப்புகள் வேறாகவும் தயாரிக்கப்பட்டு இம்மாதம் 30ஆம் திகதி வரையில் அவை பொதுமக்களின் பார்வைக்கு வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்படும் இடாப்புகளின் அடிப்படையிலேயே உரமானியம் வழங்கப்படவுள்ளது.

இவ்விடயம் சார்பான கலந்துரையாடல் கடந்தவாரம் சாவகச்சேரி கமநலசேவை மண்டபத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி ஜெகதீஸ்வரி தலைமையில் இடம்பெற்றது. காணி இடாப்புகள் தயாரிப்பதற்கு வசதியாக விண்ணப்பப் படிவங்கள் அப்போது சம்மேளனப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன.

வயல் உரிமையாளர்கள் உறுதியின் நிழற்படப் பிரதி சமர்ப்பிக்கவேண்டும் எனவும் -

குத்தகைப் பயிர்செய்கையாளர்கள் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதமும் உறுதியின் நிழற்பட பிரதியும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் - 5 ஏக்கருக்கு மேல் உரமானியம் வழங்கப்படமாட்டாது எனவும் கூறப்பட்டது. (ஒ-122)(32)



உரும்பிராயில் சாயி சகோதரர்களால் அமைக்கப்பட்ட சத்திய சாயி சேவா நிலையத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.தியாகேந்திரன் நிலைய[illegible] போது எடுக்கப்பட்ட படம். வடபிராந்திய [illegible] தலைவர் ஸ்ரீ இ.வசந்தசேனன் நிற்பதையும் படத்தில் காணலாம். (203) (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிளாஸ்ரிக் கழிவு கொள்வனவு

சாவகச்சேரி,ஏப்.12

சாவகச்சேரி பிரதேச சபை பொலித்தீன் பைகள், உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் போன்ற பிளாஸ்ரிக் கழிவுகளைக் கொள்வனவு செய்யவுள்ளது. பிளாஸ்ரிக் பொருள்கள் ஒரு கிலோவுக்கு ஐந்து ரூபா வழங்கப்படவுள்ளது.

எனவே, பொதுமக்கள் தமது வீடுகளில் நாளாந்தம் சேரும் பிளாஸ்ரிக் மற்றும் பொலீத்தீன் கழிவுகளைச் சேகரித்து அருகிலுள்ள பிரதேச சபை உப அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் கேட்டுள்ளார். (ஒ-31)(32)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | மறைவு |
|---|---|
| 15 - 02 - 1925 | 12 - 04 - 2000 |

### அமரர் பஸ்ரியன் றோமபாலா

அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்கும்
உறைவிடமாகிய எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே
ஆண்டுகள் ஆறு சென்றாலும்- என்றும்
உம் அன்பிற்காக ஏங்கிநிற்கும்...

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.129, ஸ்ரேஷன் றோட்,
யாழ்ப்பாணம்.

(49225)(26.21.15.14)

## உளவளத்துணை பயிற்சி

வடமராட்சி, ஏப்.12

வடமராட்சி வலய உளவளத்துணை நட்பு உதவியாளர்களுக்கான பயிற்சி எதிர் வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இப்பயிற்சி 16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடத்துவதற்கு முன்னர் ஏற்பாடாகியிருந்தது. ஆனால் அன்றைய பயிற்சி ரத்து செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ-173)

## மட்டக்களப்பில் கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு, ஏப்.12

மட்டக்களப்பு கோவிந்தன் வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் கைக்குண்டுத் தாக்குதலொன்று நடத்தப்பட்டிருக்கிறது.

மேற்படி வீதியில் கருணா குழுவினரின் அலுவலகமொன்று நேற்று முன்தினம் திறக் கப்படவிருந்ததாகச் செய்திகள் வெளிவந் திருந்தன. அந்த நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரி வித்தே நேற்று முன்தினம் இந்தக் கைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின் றது.

இந்தத் தாக்குத லினால் உயிர்ச் சேதங்களோ அல் லது வேறு எந்தப் பாதிப்புக்களோ ஏற் படவில்லை. இந் தச் சம்பவம் குறித்து மட்டக்களப்பு பொலீஸார் விசார ணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம் பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் - 2006

மேற்படி ஆண்டுப் பொதுக்கூட்டம் 2006.04.23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்ட பத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

க.கனகரத்தினம் (செயலாளர்),
ப.மா.சங்கம்.

(49357)(21.15.14)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08 - 03 - 1940 | 13 - 03 - 2006 |

### திருமதி சிவராசா பரமேஸ்வரி

*திதி:- சதுர்த்தசி (12.04.2006)*

13.03.2006ஆம் திகதி அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி திருமதி சிவராசா பரமேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 12.04.2006 புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும். இதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப் பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
குடும்பத்தினர்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

(48941)(21.15.14)


IIS CITY CAMPUS

BIT

Bachelor of Information Technology
University of Colombo School of Computing

கொழும்பு பல்கலைக்கழகத்தின்
தகவல் தொழில்நுட்பமானி பட்டக்கல்விக்கான
கல்வியாண்டு 2006/2007 இற்குரிய
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- விண்ணப்பதாரி 17 வயதிற்கு மேற்பட்ட வராகவும் க.பொ.த (உ.த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- இவ்வாண்டு க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ளமாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

BIT பட்டப்படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே அதிகளவு மாணவர்கள் கல்வி கற்பதும், பரீட்சைகளில் சித்தியடைவதும் எமது நிறுவனத்திலேயே என்பது யாவரும் அறிந்ததே.

Admissions For Academic Year 2006/2007

Date of Closing : 1st May 2006

Date of Selection Exam : 25th June 2006

IIS CITY CAMPUS
# 200, Sivanpannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fsx : 021 222 6933
Email : iisco@sltnet.lk

"Success Through Knowledge"



STP Your Partner in IT Solutions

கணனி வகுப்புகள்

73, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P:2222674. www.stpjaffna.com

அனைத்து வகுப்புகளும் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| DIP. IN MS OFFICE | 4 Months |
| DIP. IN HARDWARE TECHNOLOGY | 6 Months |
| DIP. IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIP. IN COMPUTER ACCOUNTING | 4 Months |
| INTERNET TECHNOLOGY | 2 Months |

Start: 15/04/2006



SATS- TECH இன் சிறப்புத் தள்ளுபடி விற்பனை மற்றும் பரிசுத்திட்டம்



KU BAND டிஸ் அன்ரனா சிஸ்டம்
*உத்தரவாதத்துடன்
** ரூபாய் 9000/= மட்டுமே

இலவசம்!
தெரிந்து எடுக்கப்படும்
அதிர்ஷ்டசாலிக்கு இன்னும்
ஒரு சிஸ்டம் இலவசம்

- ஒருவருட உத்தரவாதம். முடிந்த பின்னரும் திருத்தம் செய்வதற்கான உதிரிப்பாகங்கள் எம்மிடம் கிடைக்கும்.
- இச்சலுகை ஏப்ரல் 15 வரை மட்டுமே.

கேபிள் ரீ விக்கு உரிய அனைத்துத் தரமான உபகரணங்களும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்

SATS - TECH நிறுவனமானது இலங்கையில் செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் T.V. உபகரணங்களை நேரடியாக இறக்குமதி செய்து உத்தரவாதத்துடன் விற்பனை மற்றும் திருத்தம் செய்ய TRC இன் Vendor Licence (02244/06/N) உள்ள ஒரு நிறுவனமாகும். (48340(51-11-18-14)

மேலதிக விவரங்களுக்கு: SATS - TECH ENGINEER (நஷனல் வீடியோ சென்ரர்) 182, கே.கே.எஸ். வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். T.P.: 021 222 5908 Hot Line: 0777-710785

SATS TECH ENGINEERS



யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்

சித்திரைப் புத்தாண்டை முன்விட்டு நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்



Style Park
Perfect Collection
ஸ்ரைல் பார்க்

முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள் அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்



அனைத்து வகையான கடன் அட்டைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

MasterCard

VISA

(சி-48630)

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383 இல. 171, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 - 05 - 1951



உதிர்வு 12 - 04 - 2001

### அருள்திரு பற்றிக் இம்மானுவேல்
(குணேன்)

குருத்துவம்: 19.05.1998

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்''

நீங்காத நினைவுடன்:
அன்பு மம்மி, அக்கா, மைத்துனன்,
லண்டனில் வசிக்கும் மருமகள் சுரேஷினி,
மருமகன் சதீஷ் மற்றும் உறவினர்.

54/3. கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (49362)(32-14-34)

## 15ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 04 - 02 - 1939



இறைவன் அடியில் 12 - 04 - 1991

### திருமதி துரைராஜா கோணேஸ்வரி

குலத்தின் இலக்கணமாய்
அன்பின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
நம் அன்புத் தெய்வமாய்
என்றும் மறவாத அன்புடன்
எம்மை அரவணைத்து
நாம் சிறப்போடு வாழ
வழிவகுத்து வழிகாட்டி
எங்கள் வாழ்வுக்கும்
வளர்ச்சிக்கும் ஒளியூட்டிய
எங்கள் அன்புத் தாயே! எம்
உள்ளம் உள்ளவரை
மறையாது உங்கள் நினைவுகள்!
உங்கள் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மோகன்ராஜ் (சுவிஸ்), கிரிராஜ் (சுவிஸ்), லதா (ஜேர்மனி),
இந்துலதா (சுவிஸ்), உதயராஜ் (சுவிஸ்).

மற்றும் மருமக்களான
சுவேந்திரன் (ஜேர்மனி), சிவகுமாரன் (சுவிஸ்),
வள்ளிநாயகி (சுவிஸ்), வசந்தராணி (சுவிஸ்),
காலஞ்சென்ற குமுதினி (சுவிஸ்).

மற்றும் பேரப்பிள்ளைகளான
விதுசன் (சுவிஸ்), விதுரன் (சுவிஸ்),
விதுரன் (ஜேர்மனி), வின்சி (ஜேர்மனி),
சிந்து (சுவிஸ்).

துரைராஜா,
இல.93,
சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (48610)(32-34-14)

## கரையோரப் பாதுகாப்புக்கு விசேட படை!

கொழும்பு, ஏப். 12

இலங்கைக் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக கரையோர இராணுவப் பாதுகாப்புப் படையொன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இதற்கான பேச்சுகளை முப்படைகள் மற்றும் பொலீஸ் திணைக்கள உயரதிகாரிகள், கடந்த வார இறுதியில் கொழும்பில் நடத்தியிருக்கின்றனர். இந்தப் பேச்சில் இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் சிங் மற்றும் இந்திய கடற்படையின் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சுக்கு அமைய வெகுவிரைவில் அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக நாடாளுமன்ற சட்டமூலமொன்றின் மூலம் கரையோர இராணுவப் பாதுகாப்புப் படை நிறுவப்படவிருக்கிறது.

இலங்கைக் கடற்பரப்பில் இடம்பெறும் போதைப் பொருள் கடத்தல், கடற்கொள்ளை, ஆயுதக் கடத்தல் உட்படப் பல விடயங்களை முறியடிப்பதற்காக இந்தப் பாதுகாப்புப் படை உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)


## மணப்பெண் அலங்காரம்

வீடுகளில் வந்து மணப்பெண் அலங்காரம் செய்து தரப்படும். 5,000/=
தொடர்புகளுக்கு: வேணி,
உரும்பிராய். (சி/48778) (32-34-14)
தொ.பே.இல: 077 - 9235991

## காணி விற்பனைக்கு

கரவெட்டி வடக்கில், கன்பொல்லை வீதியில் அமைந்துள்ள 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இக்காணியைச் சுற்றி மதில் உள்ளது. இக்காணியும் முன்புள்ள வீடும் 1990 ஆம் ஆண்டுக்கு முன் அறிவாலயமாகப் பாவிக்கப்பட்டது.

தொடர்பு: க.குலவரதராசா
0112693387
0776650642
(சி/48778)(26-32-34-14)

## Diploma in Internet & E-Mail

Speed Batch Only 10 Hours
- Start on - 15-04-2006
- Days :- Sat, Sun
- Time :- 3.30 p.m
- Only For 10 Students

Fees :- 1000/=
Batch - 05

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்

C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் செல்லத்துரை

புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.470, 6ஆம் யூனிட், இராமநாதபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்கள் 10.04.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பர்வதம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேல் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் குமாரதாஸ், திருமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருணா, இரட்ணகோபால் ஆகியோரின் அன்பு மாமனும் பூமா, வித்தியா, இந்து, தீபனா மோகன், ஜெயசுதா, சுசீலன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசையா, நல்லதம்பி, பொன்னுத்துரை, கனகரத்தினம், முத்துலிங்கம், செல்லம்மா மற்றும் இராசலிங்கம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சௌந்தரம், கண்ணையா ஆகியோரின் மைத்துனரும் வெனித்தா, கரிஸ், வசிகரன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.04.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.470, 6ஆம் யூனிட்,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி. (49363)(32-14-34)

தகவல்:
திருமலர் (மகள்).

### திருமதி நவரத்தினம் சிவபாக்கியம்

மல்லாகம், நீலியம்பனை பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி நவரத்தினம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (11.04.2006) செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரவநாதர் தில்லையம்பலம் (O.A) - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தில்லையம்பலம் நவரத்தினம் (ஓய்வுபெற்ற லிகிதர், கச்சேரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் குலசேகரம், காலஞ்சென்ற மனோரஞ்சிதம் மற்றும் அரியரத்தினம், தவமணிதேவி, ஸ்ரீரங்கநாதன், குணரத்தினம், ஸ்ரீகாந்தா (பவா), யோகேஸ்வரி (பேபி), பகவதி, ஜெயரத்தினம் ஆகியோரின் பாசமிகு தாயும் கருணானந்தநாயகி, சுப்பிரமணியம், குமாரசெல்வி, காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் சிவபாக்கியம், மாலினி, அருந்தவநாயகி, ஸ்ரீரவீந்திரன், கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் K.தபேந்திரன், K.ஜெயந்திரன், K.ஞானேந்திரன், S.சுகந்தினி, S.தர்சினி, A.ஹரிகஜன், A.ஹரிகேசன், A.துவாரகா, K.தர்சினி, K.சிவகுமார், K.ராதிகா, S.செல்வகுமார், S.சதீஸ்குமார், S.ராஜ்குமார், G.றொஷான், G.ரமேஸ், S.மாதுளன், S.மாதுஷன், S.பிரசன்னா, S.நேமினா, J.திவ்வியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.04.2006) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நீலியம்பனை பிள்ளையார் கோயிலடி,
மல்லாகம்.
(49364)(32-34-14)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## நினைவுகளில் நீங்காத முதலாவது ஆண்டு

சுவிஸ்லவ்சானில் மலர்வு 17 - 04 - 2004



யாழ் வேலணையில் மலர்வு 11 - 06 - 1982

உதிர்வு: 12.04.2005

### திருமதி உதயராஜ் குமுதினி
### செல்வி உதயராஜ் சபீனா

எம் அன்புக் குமுதாவே மழலைச் செல்வமே சபீனா!
புன்முறுவல் பூத்த அந்த அழகிய வதனத்தை இனி
எங்கே காண்போம்? எப்படி மறப்போம்?
நேற்று நடந்தது போல் நெஞ்சமெல்லாம் வலியெடுக்க
கலங்கி வாடுகின்றோம் உங்களைப் பிரிந்து
ஆண்டொன்று ஆனதுவோ! ஓராயிரம்
ஆண்டானாலும் அழியாது உங்கள் நினைவுகள்
உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மண்கும்பான், வேலணை. (49220)(32-34-14)

குடும்பத்தினர்.

## முதலாம் வருட நினைவலைகள்

மலர்வு 11 06 1982



மலர்வு 17 04 2004

உதிர்வு 12.04.2005

### திருமதி உதயராஜ் குமுதினி

பிறப்பிடம்: யாழ்ப்பாணம்
வசிப்பிடம்: சுவிஸ்

குடும்பத்தின் குலவிளக்கே
குணக்குன்றே குமுதினியே
நாள்கள் சில மறைந்தாலும்- உன்
அன்பு முகம் மறைந்திடுமோ?
என்றென்றும் நினைவுகளாய்
எம் நெஞ்சில் வாழ்ந்திருப்பாய்.

### செல்வி உதயராஜ் சபீனா

பிறப்பிடம்: சுவிஸ்

சபீனா பூவே உன் மரணத்தில்
உறைந்து போனோம்
உன் மழலைப் புன்சிரிப்புகளை
எங்கே காண்போம்
மறுபிறவி என்றொன்று
இருக்குமென்றால்
கண்ணே நீ பிறப்பெடுப்பாய்
எங்கள் வீட்டில்.

சுவிஸ். (கணவன்- தந்தை) துரைராஜ் உதயராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் பிரதேச செயலகத்துக்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நல்லூரில் மாநகரசபைக்குப் பின்புறமாகவுள்ள வளவினுள் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நல்லூர் பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் அடிக்கல்லினை எடுத்துக்கொடுக்க யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டத்தின் பணிப்பாளர் செ.பத்மநாதன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் அடிக்கற்களை நடுவதையும் - நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : ஒளிஅதிரன்)

# ஆவரங்கால் பாடசாலையில் திங்களன்று விவசாயக் கண்காட்சி, நடமாடும் சேவை

அச்சுவேலி,ஏப்.12

வடக்கு- கிழக்கு மாகாண விவசாய, காணி, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சின் வழிகாட்டலில் யாழ்.விவசாயத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாபெரும் விவசாயக் கண்காட்சியும் நடமாடும் சேவையும் எதிர்வரும் திங்கட்கிழமை ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலருமான கே.கணேஸ் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மாகாண காணி விவசாய கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி அமைச்சின் செயலாளர் ஜனாப் ஏ.ஆர்.எம்.மஹ்ரூப் அவர்களும் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சொ.அமிர்தலிங்கமும் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ விருந்தினர்களாக சி.சுப்பிரமணியம் (மாகாண விவசாயப் பணிப்பாளர்), எம்.இரவீந்திரன் (மாகாண காணி ஆணையாளர்), டாக்டர் எஸ்.சிவபாலசிங்கம் (கால்நடை அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர்), எந்திரி சி.சர்வலோகநாதன் (மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர்), பேராசிரியர் எஸ்.இராசதுரை (யாழ்.பல்கலைக்கழக விவசாயப் பீடாதிபதி), திருமதி ப.சிவலிங்கம் (பிராந்திய ஆணையாளர்), திருமதி சோ.விஜயரத்தினம் (விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி, திருநெல்வேலி), க.சுந்தரேசன் (கமநலசேவை உதவி ஆணையாளர்), திருமதி அ.சாந்தசீலன் (கோப்பாய் பிரதேச செயலர்), எஸ்.செந்தில் (பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்), வீ.ரி.செல்வரத்தினம் (யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர்) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

'எதிர்காலச் சந்ததிக்கு இனிதான வாழ்விடம்' என்ற கருப்பொருளின் அடிப்படையில் எதிர்காலச் சந்ததிக்கு நீங்கள் விட்டு வைப்பது என்ன?

நோயாளியான உங்களின் உயிரைப் பணம் மீட்குமா?

ஆகிய விடயங்களைக் கேள்விகளாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள விவசாயக் கண்காட்சியில் 25 இற்கும் மேற்பட்ட உப தலைப்புக்களில் காட்சி அரங்குகள் உருவாக்கப்படவுள்ளன.

23 அலுவலகங்களில் நடமாடும் செயலகமும் விவசாயப் பயிரினங்கள், பழப்பயிர்கள், உற்பத்திப் பொருள்களின் மலிவு விற்பனையும் அங்கு இடம்பெற உள்ளது.

மாணவர்கள் மற்றும் விவசாயிகள், பொதுமக்கள் சகலரும் எதுவித கட்டணமும் செலுத்தாமல் இலவசமாக கண்காட்சியைப் பார்வையிடலாம் என்று யாழ் பிராந்திய விவசாயத் திணைக்கள பணிப்பாளர் ம.ஜெகநாதன் அறிவித்துள்ளார்.

(ஐ-117-122) (39)

# மட்டுவிலில் யுவதி,வயோதிபர் காயம்!

தென்மராட்சி,ஏப்.12

மட்டுவில் அருள்மிகு பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவத்தின்போது கொதி எண்ணைக்குள் வீழ்ந்து யுவதி ஒருவரும் ஆலய சகடை சில்லுக்குள் கால் பாதம் சிக்கி வயோதிபர் ஒருவரும் காயமடைந்தனர்.

மோதகம் பொரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது திடீரென மயக்கமுற்று கொதி எண்ணெய்ச் சட்டிக்குள் வீழ்ந்ததால் புலோலி வடகிழக்கைச் சேர்ந்த மகேஸ்வரன் முதனிக்கா (வயது22) என்ற யுவதி எரிகாயங்ளுக்கு உள்ளானார்.

ஆலய முன்றிலுக்குச் சகடையைக் கொண்டு வந்தபோது சகடைச் சில்லுக்குள் சிக்கி நல்லூர் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த ஸ்ரீ பாலச்சந்திரன்(வயது67) என்ற வயோதிபர் காயமடைந்தார். காயமடைந்த இருவரும் அங்கு கடமையிலிருந்த செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களால் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ஐ-117)

# மீசாலை வடக்கில் மீண்டும் பனைவெல்லம் உற்பத்தி

தென்மராட்சி,ஏப்.12

சாவகச்சேரி பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் மீண்டும் பனைவெல்லம் உற்பத்தியினை ஆரம்பிக்கவுள்ளனர்.

மீசாலை வடக்கில் உள்ள வெல்ல உற்பத்தி நிலையக் கட்டடத்தில் இன்று புதன்கிழமை பனை வெல்ல உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பனை வெல்லம் தேவைப்படுவோர் சங்கத் தலைமை அலுவலகத்தில பெற்றுக்கொள்ளலாமென சங்கப் பொது முகாமையாளர் வே. கிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் பின்னர் நிறுத்தப்பட்டிருந்த பதனீர் உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பனை வெல்லம் தயாரிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஐ-117)

## புத்தாண்டு பூசைவழிபாடுகளில் கலந்துகொள்ள

# மாவிட்டபுரம் அம்மன் ஆலயத்துக்கு பக்தர்கள் செல்ல படையினர் அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.12

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மாவிட்டபுரம் வீணியவரை இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் புதுவருடதினத்தன்று நடைபெறவுள்ள விசேட பூசைகளில் பக்தர்கள் கலந்து கொள்வதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

புதுவருட தினத்தன்று காலை விசேட அபிசேக ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த விசேட பூசை வழிபாட்டில் கலந்து கொள்ள விரும்பும் பக்தர்கள் காலை 8 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை சைக்கிள், மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்களில் ஆலயத்திற்குச் செல்ல படையினர் அனுமதி தந்துள்ளனர் என்று ஆலய அர்ச்சகரும் நிர்வாகிகளும் தெரிவித்துள்ளனர்.

(ஐ-203) (24)

# யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று பெயர்வளைவு திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.12

யாழ். இந்துக் கல்லூரியில் குமாரசுவாமி மண்டபத்தின் நுழைவாயிலில் அமைக்கப்பட்ட நுழைவாயில் வளைவு நேற்றுக் முற்பகல் 10 மணியளவில் சம்பிரதாயதாய பூர்வமாகத் திறக்கப்பட்டது.

கல்லூரியில் 1991ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்வி கற்ற மாணவர்கள் இந்தப் பெயர் வளைவைப் புதிதாக நிறுவியுள்ளனர். அதன் திறப்பு விழா நேற்றுக்காலை கல்லூரி அதிபர் வீ.கேணசராசா தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் பெயர்வளைவினைச் சம்பிரதாயபூர்வமாகத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கல்லூரியின் பழைய மாணவன் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுகன், முன்னாள் அதிபர் 'சுடர்' மகேந்திரன், பழைய மாணவ சங்கத் தலைவர் க.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஐ-13)(24)

# மருதங்கேணி மாதர் சங்கம் கண்காட்சியில் முதலிடம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட தையல், மனையியல், அலங்காரப் பொருள்களின் கண்காட்சிப் போட்டியில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மாதர் அபிவிருத்தி நிலையம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் செல்வி தெ.து. விஜயலட்சுமி வழங்கினார்.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ்.உதவி அரசாங்க அதிபர் (தலைமைப்பீடம்) வே.வீரபத்திரபிள்ளை உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-14)(32)




அண்மையில் லயன்ஸ் கழகம் 306 பி -1 மாவட்ட ஆளுநர் லயன் சரத் குணசேகரா, உரும்பிராய் லயன்ஸ் கழகத்திற்கு உத்தியோக வருகையை மேற்கொண்ட சமயம் கழகத் தலைவர், செயலாளர் ஆகியோருடன் ஆளுநர் மங்கள விளக்கேற்றுவதையும் விழாவிற்கு வருகைதந்தவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (ஐ)

## தவக்காலச் சிந்தனை 43

### உண்மைக்காக வாழ்வோம்

'இந்த மனிதனை எனக்குத் தெரியாது'. தனது இருப்பைத் தக்கவைக்க இருப்பைத் தந்தவரையே இவ்வாறு மறுத்துரைத்தார் சீடரான பேதுரு.

'நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்' என இயேசுவை அறிக்கையிட்டு 'யாரிடம் போவோம் இறைவா! வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன' என்று அவரிலே தஞ்ச மடைந்திருந்த பேதுரு அவரையே தெரியாது என்று மறுத்துரைக்கும் அளவுக்கு சுயநலம் வெற்றி கொண்டு விட்டது.

ஒன்றாக வாழ்ந்து, உண்டு உறவாடி, மகிழ்ந்தோரை, உதவிகள் புரிந்தோரை மறுதலிக்கும் பேதுருக்கள் இன்றும் எம் மத்தியில் இல்லையா?

வசதி, வாய்ப்புகள் வரும்போது நடந்து வந்த பாதையை மறந்துவிடுகிறோம். கணவன் - மனைவியை, பிள்ளைகள், உறவுகளை மறுதலிக்கின்றோம். படிப்பில்லை, அழகில்லை என்றால் மறுதலிப்பு, பிள்ளைகள் அடாவடி தீச்செயல் என்றால் பெற்றோர் மறுதலிப்பு, அநீதியை ஆதரித்து நீதியை மறுதலிப்பு, சந்தர்ப்பவாத சமய மறுதலிப்பு, பிறருக்கு இடறல் விளைவித்து அன்பை மறுதலிப்பு ஏன்? தன்னலத்தால் தன்னைத்தானே மறுதலிப்பு. இவையனைத்தும் இயேசுவுக்கு எதிரான மறுதலிப்புகளே.

நாம் இம்மையில் மறுதலித்தால் இறைவன் எம்மை விண்ணகத்தில் மறுதலிப்பார். எனவே எமது நிலையை எண்ணி மனம் வருந்தி மன்னிப்பு வேண்டுவோம். மறுதலிப்பதைத் தவிர்த்து உண்மைக்கும் நேர்மைக்கும் இயேசுவின் அழைப்புக்கும் குரல்கொடுப்போம். அப்போது 'நன்று, நன்று நம்பிக்கைக்குரிய ஊழியனே!' என்று இறைவன் எம்மை ஏற்றுக்கொள்வார் என நம்புவோம்.

- எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் கல்விச் சுற்றுலா மற்றும் கள ஆய்வு செயற்றிட்டத்தை மேற்கொள்ளுமுகமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் தலைமையில் தென்னிலங்கை பயணமாகி உள்ளனர். 5 நாள்களை உள்ளடக்கிய இந்தச் சுற்றுலாவில் பொலன்னறுவை, அநுராதபுரம், சிகிரியா தம்புள்ள, கண்டி, நுவரெலியா ஆகிய பிரதேசங்களுக்கும் வவுனியா, ஸ்ரீபாத ஆகிய கல்வியியல் கல்லுரிகளுக்கும் சென்று கல்வியியல் ஆய்வுகளையும் கலாசார பண்பாட்டுத் தகவல்களையும் சேகரிக்கவுள்ளனர். (ஐ-72)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மக்கள் சேவையே தனது உயிர் மூச்சாகக் கொண்டு
அல்லும்பகலும் அயராது சேவையாற்றும்
கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர்,

**உயர்திரு திருநாவுக்கரசு இராசநாயகம்**

அவர்களது அதியுயர் சேவையினைப் பாராட்டி
11-04-2006 கம்பன் விழாவில்
கௌரவிக்கப்பட்டதையிட்டு மகிழ்வடைவதுடன் அவரது
சமூகப்பணி மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

கிளிநொச்சி மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச்சங்கம்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி. (கி/48910)(26.14.16)

## வீடு விற்பனைக்கு

பலாலி வீதியில் திருநெல்வேலி
பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில்
2 ¾ பரப்பில் 5 அறைகளுடன்
கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 011 2508460,
077 6149590
(49371)(26.14.16)

## 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் 100 ஆவது இதழ் வெளியீட்டு விழா ஏற்பாடு

வடமராட்சி, ஏப்.12

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆத்மீக சஞ்சிகையின் 100 ஆவது இதழ் இந்த மாத இறுதியில் வெளியிடப்படவுள்ளது.

ஏப்ரல் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத் தலைவர் எஸ். அருள்லிங்கம் தலைமையில் வெளியீடு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா மதிப்பீட்டுரையினையும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியர் காரை எம்.பி.அருளானந்தம் வெளியீட்டுரையினையும் வழங்குவார்கள்.

பல சிறப்பு அம்சங்களை உள்ளடக்கி வெளிவரவுள்ள இச் சஞ்சிகையில் இதுவரை காலமும் ஆக்கங்களை எழுதிய அனைத்து ஆக்கவியலாளர்களினதும் ஆக்கங்கள் இடம்பெறுவதுடன் ஆக்கங்களை இதுவரை காலமும் வழங்கிய அனைவரும் இவ் வெளியீட்டு விழாவில் வைத்துக் கௌரவிக்கப்படவுள்ளனர் எனப் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ-173)(26)

## வேலைக்கு ஆள் தேவை

பதவி:- உற்பத்தி அபிவிருத்தியாளர்களும், உதவியாளர்களும்
தகைமை:- B.Sc., G.C.E.A/L, G.C.E.O/L, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி. எவ்வித தகைமை இல்லாதவர்களும் வயது கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
எதிர்வரும் 17.04.2006 இற்கு முன்னர் அனுபவச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். அல்லது நேரடியாக சமுகம் தரவும்.
சர்வதேச உயிர்நுட்பு
**BIO TEC INTERNATIONAL**
131/2, Palaly Road, Thirunelvely.
(49375)(21.11.16

## தேவை

தொலைத்தொடர்பு நிலையத்திற்கு வேலையாள் தேவை. இன்ரநெற் தொடர்பு தெரிந்தவராக இருக்கவேண்டும்.
தொடர்பு:
கலாஸ் தொலைத்தொடர்பு நிலையம்
பலாலி றோட்,
கோண்டாவில்.
(49384) (21.11.16.26)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய
உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி விமலேஸ்வரி சிறிகாந்தன்
அவர்களின் அருமை மகள் காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது கண்ணீர்
அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

யாழ்.போதனா வைத்தியசாலை,
தா.உ.நலன்புரிச் சங்கம்.
(49373) (26.14.16)

## மரண அறிவித்தல்கள்

### கனகசுந்தரம் - திருநேசமலர் (சின்னத்தங்கைச்சி)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் திருநேசமலர் அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரம் மாஸ்ரரின் அன்பு மனைவியும், பொன்னையா - தவமலர், காலஞ்சென்ற தங்கராசா - புனிதமலர் ஆகியோரின் சகோதரியும் பிறின்ஸ்-ஜெகதீஸ்வரன், றோயல்-நேசபரன், குயீனி-நளினி, கௌன்டெஸ்-றோகினி, டியூக்-சந்திரகுமார், கிங்-தேவகுமார் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (11.04.2006) செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திக்கு அருகில்,
கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

தகவல்:
பொன்னையா தவமலர்,
(சகோதரி).
(49372)(25.26.14.16)

### செல்வி ஆன்யசிந்தா (ராஜி)



அரியாலையைச் சேர்ந்த ஆன்யசிந்தா (ராஜி) அவர்கள் 09-04-2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அம்புறோஸ் குலசிங்கம் - செல்வரூபராணி தம்பதியரின் அன்பு மகளும் அன்ரன் குலேந்திரராஜா (கனடா) ஜெனிவர் மதிவதனி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் றெஜினோல்ட், நிலானி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜோன்தாசன் (சட்டத்தரணி- மன்னார்), அம்புறோஸ், இரத்தினமலர், அன்னமலர், புஸ்பமலர் ஆகியோரின் பெறாமகளும் கெலன்மரியரெட்டினம், சந்தான அமிர்தம் கருணராஜா ஆகியோரின் மருமகளும், ஆன்யூலியானவின் அன்புச் சகோதரியும் Dr. பாலசேகரம், குணசேகரம், ஞானசேகரம், தர்மசேகரம், திருச்செல்வசேகரம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் இருந்து 13-04-2006 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

392, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.071 3055817

தகவல்:
அம்புறோஸ் குலசிங்கம்
(தந்தை-கிளாக்கர்).
(49381)(26.14.16)


கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம்

## கண்ணீர் அஞ்சலி

08 12 1951





28 12 1977

கந்தபத்மநாபன் சண்முகரட்ணம் — சிறுவர் திட்டமுகாமையாளர்
செல்வேந்திரா பிரதீப்குமார் — சமூகபங்கு செயற்பாட்டு அலுவலர்

*அகாலமரணம் 10-04-2006*

நம்ப முடியவில்லை நம்ப மறுக்கிறதே - ஐயகோ
நேற்றுவரை எம்மோடு கியு.டெக்-கரித்தாஸ்
பணிவாழ்வில் பங்காளராய் நற்பணிகள் துடிப்புடனே
தேடிச்சென்று செய்தபணிகள் மனக்கண்ணில் சுமையாக
சுமைகள் தாங்கா துடிதுடிக்கும் உறவுகளும் உங்கள்
தூயபணியை நினைந்துருக நாட்டின் அவலங்கள்
நம்மவர் நிலை வாழ்வு நடுத்தெருவில் கலைந்ததுவோ
உறவுகள் துயரோடு நாமும் ஒன்றாய் இணைந்து
இதயக்கனத்துடனே இறைவனை இறைஞ்சுகின்றோம்
நின் ஆத்மா சாந்திபெற
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**CARITAS - HUDEC Mourns**

We would like to express our sympathy and our sincere condolences to Predip's family. For us, as Caritas Hudec staff, his smile will remain in our mind as what used to light up every of our mornings. He had the talent to bring positive energy to the rest of the team and was passionate to work with the communities.

We would like to express our sympathy and our sincere condolences to Paath's family. For us, as Caritas Hudec staff, he will remain some one fully dedicated and enthusiastic to work with the children. We will miss his good humour and his effervescent personality.

DIRECTOR,
STAFF,
HUDEC-CARITAS, JAFFNA.
(49388)

இயக்குநர்,
சகபணியாளர்கள்,
கியு.டெக்-கரித்தாஸ்,
யாழ்ப்பாணம்.



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6589092 முதல் 6599229 வரை. சீட்டிழுப்பு இல. 227 திகதி 10-04-2006

வெற்றி எண்கள்

9 0 6 5 9 0 — சுப்பர் எண் 20

ஜக்பொட் பரிசு ரூ. **12,044,050/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 12,044,050/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 89 | 5,000/= | 445,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 872 | 500/= | 436,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8790 | 50/= | 439,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 87047 | 10/= | 870,470/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 10 | 5,000/= | 50,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 88 | 1,000/= | 88,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 873 | 100/= | 87,300/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8712 | 20/= | 174,240/= |
| | | மொத்தம் | ரூ. 4,040,510/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,643,110/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 6597451-2-64 |
| களுத்தறை | 6593514-9-58 |
| நுவரேலியா | 6589370-6-40 |
| மாத்தறை | 6590948-4-35 |
| கொழும்பு | 6598679-4-62 |
| மட்டக்களப்பு | 6594483-1-84 |
| குருணாகல் | 6589730-8-11 |
| மாத்தளை | 6598075-2-23 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 12,288,275/-

தொடர் இல. 7505992 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஏப்ரல் 13 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.கவிலிருந்து விலகினார் சரத்குமார்

சென்னை,ஏப்.12

பிரபல திரைப்பட நடிகரும் மாநிலங்களவை தி.மு.க உறுப்பினருமான சரத்குமார் தி.மு.கவில் இருந்து விலகினார். இது தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். யார் என்று பெயர் குறிப்பிடாமல் கருணாநிதியின் சொந்தங்களால் தாமும் தமது மனைவி ராதிகாவும் அவமானப்படுத்தப்பட்டதாகவும் ஆனால், அதை கருணாநிதி தட்டிக் கேட்கவில்லை என்றும் அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார். (ஐ-202))22)

# 'சன்' ரீ.வியில் ராதிகாவின் 'மெகா' தொடர்கள் தொடருமா?

சென்னை ஏப்.12

நடிகர் சரத்குமார் தி.மு.கவிலிருந்து விலகியதையடுத்து அவருடைய மனைவி ராதிகா தயாரித்து வரும் 'மெகா' தொடர்கள் 'சன்' ரீ.வியில் தொடர்ந்து ஒளிபரப்பப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.


'ராடன் மீடியா வேர்க்ஸ் லிமிட்டட்' சார்பில் ராதிகா பல ரீ.வி. சீரியல்களைத் தயாரித்து வந்தார். அவை சன் ரீ.வியில் ஒளிபரப்பாகி நேயர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுவருகின்றது.

தற்போது 'செல்வி' தொடரும் 'தங்கவேட்டை கேம்சோவும்' நேயர்களிடம் பரவலான வரவேற்பைப் பெற்றுள்ளன. இவை சன் ரீ.வி. மற்றும் அதன் இதர சனல்களான 'சூர்யா', 'உதயா', 'ஜெமினி' போன்றவற்றிலும் ஒளிபரப்பாகி வருகின்றன.

தற்போது சரத்குமார் தி.மு.கவில் இருந்து விலகியுள்ளதால் இந்தத் தொடர்களுக்குப் பாதிப்பு வருமா என அறிய சன் ரீ.வி. குழுமத் தலைவர் கலாநிதி மாறனைத் தொடர்புகொள்ள முயன்றபோது அவர் கிடைக்கவில்லை.

ஆனால் "சரத்குமார் விலகியதால் ராதிகாவின் ரீ.வி. சீரியல்களுக்கு எந்தத் தடையும் ஏற்படாது. அவை தொடரும். அவர் விலகியதை இதோடு சம்பந்தப்படுத்த வேண்டாம்" என்று சன் ரீ.வி. வட்டாரங்கள் தெரிவித்தன - என்று 'தினமணி' செய்தி கூறுகின்றது. (ஐ-202)(22)

# சரத்குமார் விலகல்: தி.மு.கவை பாதிக்குமா?



வேட்புமனு தாக்கலுக்கு இன்னும் ஒரு நாளே உள்ள நிலையில் பல்வேறு கட்சித் தலைவர்களும் சூறாவளிப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள இந்நிலையில் தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினரும் 'சுப்ரீம்' ஸ்டாருமான நடிகர் சரத்குமார் அக்கட்சியிலிருந்து விலகியுள்ளார்.

தி.மு.க.விலிருந்து சரத்குமார் விலகும் முடிவானது மதில் மேல் பூனை போலவே இருந்து வந்தது.

சென்னையில் ரசிகர்கள் மாநாடு நடத்தி தனது செல்வாக்கை தலைமைக்கு அண்மையில் உணர்த்தினார். தன்னை வெறுமனே புறந்தள்ள முடியாது என்பதை ரசிகர்கள் பட்டாளத்தைத் திரட்டி சூசகமாக உணர்த்தினார்.

அத்தோடு நில்லாமல் தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரசாரம் செய்யப் போவதில்லை என தனது ரசிகர்களை தீர்மானம் போடச் சொல்லிவிட்டு சென்னையில் இருந்துகொண்டே மாநாட்டுத் தீர்மானம் நிறைவேறிய போது சரத் பங்கேற்காமல் தனது விலகல் முடிவை சூசகமாக உணர்த்தினார். தேர்தல் வரை சரத் கட்சியில் நீடிப்பார். தேர்தலுக்குப் பிறகு அவர் இது குறித்து முடிவு செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது. அவரை சமாதானப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இவை ஏதும் பலனளிக்கவில்லை என்றே தோன்றுகிறது. தி.மு.கவிலிருந்து விலகும் முடிவை கட்சித் தலைவருக்கு கடிதம் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார் சரத். தனது விலகலுக்கு கட்சித் தலைமையின் குடும்ப அரசியல்தான் காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதே குற்றச்சாட்டைத்தான் அக்கட்சியிலிருந்து விலகிய விஜய டி ராஜேந்தரும் குறிப்பிட்டிருந்தார்.

ராஜேந்தர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.முக.வுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார். இம்முறை அ.தி.மு.கவில் எதிர்பார்த்த அளவுக்கு டிக்கெட் ஒதுக்கப்படாததால் தனித்து போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார். தமிழக அரசியலில் சினிமாவைத் தவிர்க்கவே முடியாது. நடிகர்களுக்கு மக்களிடையே இருக்கும் செல் வாக்கு இதற்கு ஒரு காரணம்.

சரத்குமார் நடிகர் என்பதோடு தென்மாவட்டங்களில் சமுதாயம் சார்ந்த வாக்கு வங்கிகளை ஈர்க்கும் சக்தியாக விளங்குவார் என்று நம்பப்படுகிறது. அதேபோல சரத்குமாருக்கென உள்ள ரசிகர் பட்டாளத்தின் பங்களிப்பும் தேர்தல் களத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீத வாக்குகளைப் பெற்றுத் தரும்.

தி.மு.க. அணியில் மக்களைக் கவரும் நட்சத்திரமாக சரத்குமார் இருந்தார். அவரது விலகல் அக்கட்சிக்கு அதுவும் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள இந்நிலையில் சற்று பாதிப்பை ஏற்படுத்தும் என்றே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். (ஐ-202)(22) *(நன்றி : தினமணி)*

# கென்ய விமானம் மலையில் மோதியது! 2 அமைச்சர்கள் உட்பட 14 பேர் பலி!!

நைரோபி,ஏப்.12

கென்ய ராணுவ விமானம் ஒன்று விபத்திற்குள்ளானதில், அதில் பயணம் செய்த அந்நாட்டு அமைச்சர்கள் இருவர் உட்பட 14 பேர் பலியாகினர். இந்த விமானம் மலையில் மோதி விபத்திற்குள்ளானது.

தீப்பிடித்து எரிந்த விமானம் கீழே விழுந்து நொறுங்கியது. இதில் பயணம் செய்த கென்ய உள்நாட்டு பாதுகாப்பு துணை அமைச்சர் மிருகி கரியுக், பிராந்திய வளர்ச்சித்துறை துணை அமைச்சர் டிடூஸ் கோயோனி உட்பட 14 பேர் பலியாகினர். விமானத்தில் இருந்த மேலும் மூன்று பேர் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர்.

இவர்கள் நைரோபியில் உள்ள மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து நடந்த இடத்தில் பாதுகாப்புப் படையினரும் செஞ்சிலுவை சங்கத்தினரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். விபத்தில் இறந்தவர்களுக்கு கென்ய அதிபர் மிவாய் கிபாகி இரங்கல் தெரிவித்துள்ளதோடு, மூன்று நாள்கள் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்கப்படும் என கூறியுள்ளார். (ஐ)(202)(22)

# காத்மண்டுவில் ஊரடங்கு நீடிப்பு!

காத்மண்டு,ஏப்.12

நேபாளத்தில் மன்னராட்சிக்கு எதிரான போராட்டம் தொடர்வதால் நான்காவது நாளாக நேற்றும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. நேபாளத்தில் மன்னர் ஞானேந்திராவின் ஆட்சி நடைபெற்று வருகிறது. ஜனநாயக ஆட்சி மலரவேண்டும் என வலியுறுத்தியும் மன்னராட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அந்நாட்டு முக்கிய எதிர்க்கட்சிகளும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மாணவர் சங்கங்கள், அரச அலுவலர்கள் பொதுவேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர். இதனால் நேபாளத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்த மன்னர் ஞானேந்திரா உத்தரவிட்டார். கடந்த மூன்று நாள்களாக ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கிறது. நான்காவது நாளான நேற்றும் இந்த ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தது.

இதுகுறித்து நேபாள வானொலி அறிவித்த செய்தி ஒன்றில் "ஊரடங்கு உத்தரவு தலைநகர் காத்மண்டு மற்றும் அதனைச் சுற்றியுள்ள சில புறநகர்ப் பகுதிகளிலும் அமுல்படுத்தப்படும். இது முற்பகல் 11 மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை அமுலில் இருக்கும்" எனத் தெரிவித்தது. மன்னராட்சிக்கு எதிரான ஏழு கட்சி கூட்டணியின் பிரதிநிதிகள் காத்மண்டுவில் சந்தித்துப் பேசி காலவரையற்ற போராட்டம் நடத்துவது குறித்து ஆலோசித்தனர். இந்த முடிவை எதிர்த்துத்தான் இந்த ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. (ஐ-202)(22)

# ஈரான் மீது அணு ஆயுதப் பிரயோகமா? 'காட்டுத்தனமான' எதிர்வுகூறல் என்கிறார் புஷ்

## இராஜதந்திர முறையில் தீர்க்கவே விருப்பமாம்



வாஷிங்ரன்,ஏப்.12

ஈரானுக்கு எதிராக அணு ஆயுதத்தைப் பிரயோகிப்பது பற்றி தாம் யோசித்து வருவதாக வெளிவந்துள்ள செய்திகளை 'காட்டுத்தனமான எதிர்வு கூறல்' என்று கூறி நிராகரித்துள்ளார் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்.

ஏற்கனவே நியூயோர்க்கிலிருந்து வெளியாகியிருந்த செய்தியொன்றில் அமெரிக்கா ஈரான் மீது அணு ஆயுதம் பிரயோகிப்பது பற்றிய திட்டங்களை முன்னெடுத்து வருகின்றதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானிய பிரச்சினைகளுக்கு ராஜதந்திர வழியிலான தீர்வொன்றைக் காண்பதிலேயே கவனம் செலுத்திவருவதாக அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

யுரேனியம் செறிவுபடுத்தப்படுவதைக் கைவிடுவதற்கு ஈரானிய அதிபர் மக்மூத் அகமதின் ஜாட் கண்டிப்பாக மறுத்துவருகின்றார். எதிர்வரும் நாள்களில் நல்லதொரு அணு செய்தி வெளிவரும் என்று ஈரானிய அதிபர் அறிவித்தார். ஆனால் விவரம் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

ஐ.நா.அணு கண்காணிப்பு அமைப்பின் தலைவர் மொகம்மது எல் பராடி புதன்கிழமையன்று ஈரானுக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்தார். (ப)(22)



**இலங்கை இராணுவத்திடம் இருந்து தப்புவதற்காக இந்தியா வந்ததாகக் கூறும் ஐவர் தமிழகம் மண்டபம் முகாமை வந்தடைந்தனர். திருகோணமலை தோப்பூரைச் சேர்ந்த சந்திரகாந்தன், அவரது மனைவி திலகவதி,மகன் தனுஷன், திலகவதியின் தாயார் மலர், அக்காவின் மகள் இராஜினி ஆகியோர் படகு மூலம் நேற்றுமுன்தினம் காலை தங்கச்சிமடம் தென்கடற்கரைப் பகுதியில் வந்திறங்கினர். அவர்களையே படத்தில் காணலாம்.**

# அஸாமில் 2ஆம் கட்ட வாக்குப் பதிவு

கௌகாத்தி,ஏப்.12

அஸாம் சட்டசபைக்கான இரண்டாம் கட்டத் தேர்தலில் நேற்று பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் மற்றும் மாநிலத்தின் பல இடங்களில் பெய்த மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் வாக்குச்சாவடிக்கு சென்று தங்கள் வாக்குளைப் பதிவுசெய்தனர். மொத்தம் 70 சதவீத வாக்குகள் பதிவாகின. அசாமில் இரண்டு கட்டமாக சட்டசபைத் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதன்படி, முதல் கட்டத் தேர்தல் கடந்த மூன்றாம் திகதி நடைபெற்றது.

அன்று மொத்தமுள்ள 126 தொகுதிகளில் 65 தொகுதிகளுக்கான வாக்குப் பதிவு நடந்தது. அப்போது 73 சதவீத வாக்குகள் பதிவாகின. எஞ்சியுள்ள 61 தொகுதிகளில் இரண்டாம் கட்டமாகத் தேர்தல் நடைபெற்றது. (ஐ-202)(22)

# அமெரிக்காவில் இந்துக் கோயில் மீது தாக்குதல்! கும்பாபிசேகம் தாமதமாகலாம்

அமெரிக்காவில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் இந்துக் கோயில் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் அந்தக் கோயிலின் கும்பாபிசேகம் நடைபெறுவது தாமதமாகலாம் என்று கூறப்படுகின்றது.

அமெரிக்காவில் 20 லட்சம் இந்துக்கள் வசிக்கின்றனர். மாப்ளே க்ரோவ் நகரில் உள்ள மின்னே சோட்டா பகுதியில் மட்டும் 20ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்துக்கள் உள்ளனர்.இப்பகுதியில் 18மாதங்களுக்கு முன் 40ஏக்கர் பரப்பளவில் சம்பிரதாய முறைப்படி ஓர் இந்துக் கோயில் கட்டும் பணி தொடங்கியது.இதற்கான சிலைகளை இந்தியாவில் உள்ள சிற்பிகள் செதுக்கி னர். வரும் ஜுன் மாதம் இந்தக் கோயிலின் கும்பாபிசேகத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை இந்தக் கோயிலின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.இந்தத் தாக்குதலில் லட்சக்கணக்கான மதிப்புக்கு சேதம் ஏற்பட்டது. கோயில் கலையரங்கத்தின் சுவர்களிலும் சாப்பாட்டுக்கூடத்தின் உட்புற மேற்பரப்புக் கூரையிலும் ஓட்டை விழுந்துள்ளது. [illegible] சில சிலைகள் சேதமடைந்துள்ளன. இந்து சம்பிரதாயத்தின்படி சேதமடைந்த சிலைகளை வழிபடக்கூடாது என்பதால் அவற்றை பயன்படுத்த முடியாது.அதற்குப் பதிலாக புதிய சிலைகளை செதுக்க 12 வாரங்களாகும்.கோயிலை சீரமைக்கவும் சிறிது காலமாகும். அதனால் கோயிலுக்கு எப்போது கும்பாபிசேகம் நடத்துவது என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று கோயிலின் அதிகாரபூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாப்ளே க்ரோவ் நகர நிர்வாகி அல்மட்சன் இது பற்றி கூறுகையில் 'இந்தக் கோயிலைக் கட்டுவதற்கு நகர அதிகாரிகள் ஆதரவாகவே இருந்தனர்.இது இந்துக் கோயில் என்பதால் தாக்குதல் நடந்துள்ளது என்று கூற முடியாது.வேண்டுமென்றே கலைப்பொருள்களை அழிக்கவேண்டும் என்ற நோக்கில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது'- என்று கூறினார்.

இதற்கிடையே கோயில் வளாகத்துக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துவது குறித்து மாப்ளே க்ரோவ் நகர அதிகாரிகள் அடுத்தவாரம் கலந்து பேசி முடிவு செய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-202)(22)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன (ஆண்/பெண்)

**Full Time/Part Time Lecturer**

- Office Automation Course (Full Time) (MS Office)
- DTP (Full Time)
- Electronic Commerce } Part Time
- Tally Accounting Soft Ware } Part Time

நேரில் சகல ஆவணங்களுடனும் சமுகந்தரவும்

*நேரம் 9 - 12 a.m.*
*11.04.2006 செவ்வாய், 12.04.2006 புதன்.*

**ACS**
Kopay Junction
Kopay.

(சி-48793)(21.111.14.26)



## கிறிஸ்தவ பாத யாத்திரை

இயேசுக் கிறிஸ்துவின் பாடுகளை முன்னிட்டு எதிர்வரும் 14-04-2006 அன்று காலை 10 மணிக்கு யாழ். பட்டணத் திற்குள் பாத யாத்திரையாகச் செல்ல தமிழ் மிஷன் சபையினர் தீர்மானித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள ஆவிக்குரிய போதகர்கள், விசுவாசிகள் யாவரையும் எம்மோடு சேர்த்து தேவநாமத்தை உயர்த்தி மகிமைப்படுத்தும்படி இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் அன்போடு அழைக்கின்றோம்.

குறிப்பு:

*இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.*

பாஸ்ரர் டானியேல்,
தமிழ் மிஷன் சபை,
இல.418, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 6821

(49236)(26.11.14)



சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

18-45 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து கீழ்க்காணும் பதவி களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.** 1. பதவி : கணக்குப் பதிவாளர்
2. பதவி இலக்கம்: 301/13
3. சம்பளத் திட்டம். 4000 - 75X10 - 5550 - 80X10

இத்துடன் கூட்டுறவு சேவையாள் ஆணைக்குழு சுற்று நிருபத் திற்கமைவான ரூபா.1250/-, ரூபா.2500/- சேர்த்து வழங்கப்படும்.

4.தகைமைகள்:

1- கூட்டுறவுப் பணியாளரின் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கியல் பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கியல் பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

2- க.பொ.த.(சாதாரண தரம்) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் வர்த்தக எண்கணிதம், தூய கணிதம், சிங்கள/தமிழ்பாசை என்பன வற்றினை உள்ளடக்கியதாக 05 திறமைச் சித்திகளுடனான 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் லிகிதர் பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**2.** 1. பதவி: லிகிதர்
2. பதவி இலக்கம்: 302/15
3. சம்பளத் திட்டம்: 2500 - 65X10 - 4250 - 70X10

இத்துடன் கூ.வே.ஆணை. சுற்று நிரூபத்திற்கமைவான ரூபா 1250/-, ரூபா.2500/- உம் சேர்த்து வழங்கப்படும்.

4. தகைமைகள்: க.பொ.த.(சா/த) இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம், வர்த்தக கணிதம், தூய கணிதம், தமிழ் என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(இரு பதவிகளுக்கும் கணனித் தகைமையுடையவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்)

5- பொது. கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லையில் விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுப் பணியாளர்கள் விண் ணப்பங்களைத் தங்கள் சங்கம் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

6- விண்ணப்பங்களை சுயமாக தயாரித்து முழுப்பெயர், பிறந்த திகதி, முகவரி, கல்வித்தகைமைகள், தொழில் அனுபவங்கள், நற்சான்றுப் பத்திரங்கள் உள்ளடக்கப்பட்டு 24-04-2006 திகதிக்குள் பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர் சங்கானை பனை- தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

-பொது முகாமையாளர்.

(49246)(26.11.14)


## விளையாட்டு நிகழ்வுகள்

புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகமும் கலையகம் சனசமூக நிலையமும் இணைந்து அமரர் சி.அரியகுட்டி நினைவுக் கிண்ணத் துக்காக மாவட்ட ரீதியில் நடத்தும் கரபந் தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதா னத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

* பிற்பகல் 4மணி - அரியாலை ஐக்கிய வி.க. எதிர் கலைமதி வி.க.
* பிற்பகல் 4.45மணி - காங்கேசன்துறை ஐக்கிய வி.க. எதிர் இந்து இளைஞர் வி.க.

(3-190)(26)

* * *

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடை யிலான பூப்பந்தாட்டப் போட்டியில், 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டி இன்று புதன்கிழமையும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக் கான போட்டி நாளை வியாழக்கிழமையும், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற வுள்ளன என யாழ்.மாவட்ட பாடசாலை விளை யாட்டுக் குழுவின் செயலாளர் க.குமாரசாமி தெரிவித்துள்ளார். (3-190)(26)

## புலிகள் கண்டனம்

மிருசுவிலில் பொதுமக்களைப் பாதிக்கும் விதத்தில் இடம்பெற்றிருக்கும் கிளைமோர்த் தாக்குதலை புலிகள் இயக்கம் கண்டித்திருக் கின்றது. இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட் டவர்களின் உறவினர்களுக்கும் பாதிக்கப் பட்டோருக்கும் தங்களது ஆழ்ந்த கவலை யைத் தெரிவித்திருக் கும் விடுதலைப்புலி கள் அமைப்பு மேற்படி தாக்குதல் சம்பவத் துக்கும் தங்கள் அமைப் புக்கும் எந்தவித சம் பந்தமும் இல்லை என் றும் தெரிவித்திருக் கின்றது. (ஐ-க)

## கரையோரப் பகுதிக்கு மின் வழங்க மின்பிறப்பாக்கிகள்

வடமராட்சி, ஏப்.12

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வட மராட்சி வடக்கின் கரை யோரப்பகுதியான கற் கோவளம் தொடக்கம் தொண்டைமானாறு வரையிலான இடங் களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென இலங்கை மின்சார [illegible]யின் யாழ்.பிரா[illegible] திய அலுவலகத்திற்கு 18 மின் பிறப்பாக்கி களை இலங்கை மின் சாரசபை வழங்கியுள்ள தாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த மின்பிறப் பாக்கிகள் மூலம் ஆழிப் பேரலை பாதித்த இடங்களுக்கு மின்சா ரம் வழங்கப்படவுள் ளது. இதேவேளை ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கென புதிதாகக் கட்டப்பட்டுவரும் வீடுகளுக்கும் மின்சா ரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரப் பட்டுள்ளது.(ஐ-173)


# UNIVAC
## Software Engineering Park

**MCSD Microsoft Certify Solution Developer**

Microsoft நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய Software Engineering பயிற்சி நெறியினை இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்திய யுனிவெக் நிறுவனம் தற்போது அனேக மாணவர்களின் வேண்டு கோளின்படி மேலும் ஒரு தொகுதி மாணவர்களிற்கு போட்டிப்பரீட்சை ஊடாக புலமைப்பரிசில் அடிப்படையில் இப்பயிற்சி நெறியினை வழங்க முன்வந்துளளது.

சான்றிதழ்: **Microsoft** நிறுவனத்தின் சான்றிதழ்.

இச்சான்றிதழ் பெற்றவர்கள் உலகின் எந்த நாட்டிலும் மென்பொருள் வடிவமைப்பு நிறுவனங்களில் இலகுவாக வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ளமுடியும்.

### இலவச கணனிக் கருத்தரங்கு

"கணனி மென்பொருள் வடிவமைப்பு பயிற்சிநெறிகளும் சர்வ தேச அங்கீகாரம் உள்ள சான்றிதழ்களும்" தொடர்பான கருத்தரங்கு இம்மாதம் 12,13,15ம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும். அனைவரும் கலந்துகொள்ளலாம;.

213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Managing Director
077 6176476





## T.R.R.O LTD

### Calling For Quotation

Scaled quotations will be Received by me for the under mentioned items to be supplied to Tsunami affected populations.

| No | Item | Specification | Numbers |
|---|---|---|---|
| 1. | Nets | 6Ply x 5/8"(100x50) | 450 |
| 2. | Nets | 3Ply 1/2"(100x50) | 180 |
| 3. | Nets | 3Ply x 5/8"(100x50) | 45 |
| 4. | Arakkoddi | 4Ply x 2 1/4"(150X150) | 750 |
| 5. | Steel Almirah | (Large) | 05 |
| 6. | Filing Cabinet | 4 drawer | 05 |
| 7. | Table (3X5) | 2 drawer | 05 |

Tenderers have to mention in their quotation the date of delivery and other condition, if any. Date of Closing date 26/04/2006.

The Chairman,
**T.R.R.O**
106, 4th Cross Street,
Jaffna.
*Telephone No - 0212222416*



## சித்திரை புத்தாண்டு மாபெரும் மலிவு விற்பனை

10.04.2006 தொடக்கம் 15.04.2006 வரையும் சிறப்புத் தள்ளுபடியுடன் தமது 29 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சகல விதமான புடைவைத் தினுசுகளையும் மலிவு விலையில் விற்பனை செய்கிறார்கள்.

புதிய சாறி ரகங்கள், புதிய சுரிதார், சோட்ஸ், சுரிதார் சோளிகிட், ஸ்கேட் அன் பிளவுஸ், ஆண்களுக்கான ரவுசர், சேர்ட் வகைகள் சிறுவர், சிறுமியர்களுக்கான எல்லா விதமான ரெடிமேட் வகைகள்,அனைத்து ரக பட்டு சாறி வகைகளும் அடங்க விசேட தள்ளுபடியுடன் விற்பனை செய்கிறார்கள். உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்.



# ஜீ.எஸ்.லிங்கநாதன் அன் கோ

இல. 13, 14, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

T.P.:3139

இல. 79, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/48792)(23.21.17.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் பங்குனி மாதம் 29ஆம் நாள் (12.04.2006) புதன்கிழமை காலை 9.06 மணிமுதல் 10 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

**விஜெய்** கிவ்ற் எம்போறியம்

எனும் எமது நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து நிகழ்வினைச்சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**VIJEI GIFT EMPORIUM**
521, Pointpedro Road,
Nallur, Jaffna.

(49394)
(54-12-49)

உரிமையாளர்:
விஜேய் றெக்கோடிங் சென்றர்

## துயர் பகிர்கின்றோம்

10.04.2006 அன்று அகாலமரணமடைந்த HUDEC நிறுவன ஊழியர்களான

**சண்முகரட்ணம் காந்தா பத்மநாபன்**
**செல்வேந்திரா பிரதீப்குமார்**

ஆகியோரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பதினருக்கும் நிறவனத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(49393)
(54-12-49)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்.
(JSAC)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அன்னலிங்கம் சரஸ்வதி

அன்னை மடி இல் 14.02.1927 ✝ ஆண்டவன் மடியில் 12.04.2005

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று (12.04.2006) புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அங்கிலிக்கன் திருச்சபையில் நடைபெறும் நினைவஞ்சலி ஆராதனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.
(நிய சேச் முன்பாக)

(49389)
(54-12-49)

பிள்ளைகள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்கள்



### வேலுப்பிள்ளை ஜீவரட்ணம் (சிவசாமி)

கந்தர்மடம், ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஜீவரட்ணம் அவர்கள் 08.04.2006 சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோதிடக் கலாநிதி வேலுப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் ருக்மணியின் அருமைக் கணவரும் திருமதி ஜெயந்தி (சதாக்குமார்-ஜேர்மனி), சுரேஸ்குமார் (இந்தியா), ரமேஸ்குமார் (லண்டன்), குவேஸ்குமார் (ஜேர் மனி), குமணேஸ் (லண்டன்), திருமதி பிரியதர்சினி முகுந்தன் (ஜேர்மனி), குணதீஸ் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதாக்குமார் (ஜேர்மனி), திருமதி செல்வி சுரேஸ்குமார் (இந்தியா), திருமதி சியாமளா ரமேஸ்குமார் (லண்டன்), திருமதி விமலா குவேஸ்குமார் (இந்தியா), திருமதி கௌரி குமணேஸ் (கனடா) முகுந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் ஆசை மாமனும் ஜுட்பிரவீன் (ஜேர்மனி), சரண்யா (ஜேர்மனி), தரணிக்கா (இந்தியா), நவீனா, பவித்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஞானப்பிரகாசம் (கந்தசாமி- கனடா), காலஞ்சென்றவர்களான குமாரசாமி, துரைமணி, குபேந்திரன் மற்றும் சோதிடர் ரவீந்திரன், திருமதி மங்களேஸ்வரி இராசரத்தினம், திருமதி ஜெயா புலேந்திரன், திருமதி ராஜி மோகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தம்பிராசா, காலஞ்சென்றவர்களான இராசதுரை, யோகராசா மற்றும் செல்வராசா, விஜயன் ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2006) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது ஆத்திசூடி வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/12, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம் மேற்கு, யாழ்ப்பாணம்.

(49398)
(33-54-12-49)

தகவல்:
ருக்மணி (மனைவி).

### முத்துத்தம்பி நல்லநாதன்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது புத்தளத்தில் வசித்து வந்தவருமான முத்துத்தம்பி நல்லநாதன் அவர்கள் நேற்று (11.04.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகுமார், இராசினி, சிவலோசன், சிவனேசன் ஆகியோரின் தந்தையும் சுகிர்தாவின் மாமனாரும் ரஞ்சித், விதுசிகா, தரூன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

No.: 73/1, No. 2nd Cross Street,
Puttalam.

(49395)
(54-12-49)

தகவல்:
மகன்.

## ஆசிரிய கலாசாலைக்கு விண்ணப்பம்

ஆசிரிய கலாசாலைகளில் ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பம் கல்வியமைச்சால் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென்று தெரிவிக்கப் பட்டது.

## 45ஆம் நாள் நினைவுகளில்

மண்ணில் 01. 04. 1983



மண்ணுக்காய் 25. 02. 2006

### செல்வல் மாணிக்கம் யோகேஸ்வரன்

(குலச்சுடர்)

குற்றமே செய்யாமல்
சத்தமே இல்லாமல்
நம்மை விட்டுப் போன உத்தமனே
நாதியற்று கதறுகிறோம்
கதியற்று குமுறுகிறோம்.

நாதோலை,
இளவாலை.

(49401) (54-12-49)

தகவல்:
இராசம்மா, கமலேந்தினி,
வினோதினி, கேதீஸ்.

**புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனை**

DVD தமிழ், ஆங்கிலம்
VCD, ACD, (ஒறிஜினல் CD)
VCD ஐங்கரன் 325 தொடக்கம்

**வீடியோ போஸ்ரர்கள்**
**FLASH CD HOUSE**
64, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ்நிலைய வீதி.)

**ராஜா** யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
**மெர்க்குரிப் பூக்கள்**
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30,2.30,6.30,9.00,(பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜயகாந்த் நடித்த **சுதேசி**
அடுத்த வெளியீடு: **டிஸ்யும்**
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்

இன்று முதல்
S. J. சூர்யா, நயன்தாரா, விவேக்
நடித்த
**கள்வனின் காதலி**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

## மரண அறிவித்தல்கள்



### சண்முகரட்ணம் காந்தாபத்மநாபன் (காந்தா)

(சிறுவர் திட்ட முகாமையாளர், கியூடெக் யாழ்ப்பாணம், வன்னி)

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் 74, குருசோ வீதி, சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகரட்ணம் காந்தாபத்மநாபன் (காந்தா) 10.04.2006 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகரட்ணம் - தையல்நாயகி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சரவணபவானந்தம்-மங்கையற்கரசி தம்பதியரின் மருமகனும் ஜெயக்குமாரி (மக்கள்வங்கி யாழ். பிரதான வீதி), அன்புக் கணவரும் சாமகீதன், நசிகேதன் (யா/பரியோவான் கல்லூரி), அபர்ணா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரஸ்தா, மாவைக்கரசன் (மாலைதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஜெயக்குமார் சுகிதகுமாரி (மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி), ஷகிலகுமாரி (கொழும்பு), துஷ்யகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2006) புதன் கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பை யன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74, குருசோ வீதி,
சுண்டுக்குளி. தொ.பே. 0214590006

(49391)
(33-54-12-49)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி பறுவதம் செல்லத்துரை

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பறுவதம் செல்லத்துரை நேற்று (11.04.2006) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (ஏழாலை வடக்கு) அவர்களின் அன்பு மனைவியும் திருச்செல்வநாதன் (ஆசிரியர், யா/கனகரத்தினம் ம.ம.வி.), திருச்செல்வகுமாரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் அருட்செல்வி (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), ஜெயரட்ணம் (லண்டன்), ஆகியோரின் மாமியும், கௌசிகன், கோசிகன், செழியன், சேந்தன், சங்கவி, ஹரிபிரசாத், பிரவீணா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2006) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அம்மன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

68, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(49387)
(33-54-12-49)

தகவல்:
திருச்செல்வநாதன் (மகன்).
தொ.பே. 0714182456

### திருமதி புனிதவதி விநாயகமூர்த்தி



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி விநாயகமூர்த்தி அவர்கள் நேற்றுமுன்தினம் (10.04.2006) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் வண்ணார்பண்ணையில் வசித்து நிறைவடைந்த வைத்திய கலாநிதி சபாபதி செட்டியார் இராசமணியின் அன்புப் புதல்வியும் நிறைவடைந்த வைத்திய கலாநிதி நாகலிங்கம் விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும் நிறைவடைந்த திருமதி பாலசுந்தரம் இரத்தினசபாபதி, காந்திமதி, W.S. செந்தில்நாதன் (சட்டத்தரணி) அவர்களின் பாசமிகு சகோதரியும் திருமதி இராஜமாணிக்கம் செந்தில்நாதனின் அன்பு மைத்துனியும் ஸ்ரீசக்திவேல் (ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்/**Charman Mediation Board Jaffna**), ஸ்ரீமயூரன் (முகாமையாளர் வழங்குதல், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை/ ஆலோசகர் **Swiss Biogenic**), திருமதி ஜெகதேவி வைரமுத்து, வைத்தியகலாநிதி திருமதி ஸ்ரீரஞ்ஜனி சிவபாலன்(சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத் துறை யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும் திருமதி லோகநாயகி கலாவல்லி, நிறைவடைந்த கா.வைரமுத்து (ஓய்வுபெற்ற மருந்தாளர் யாழ்.போதனா வைத்தியசாலை), ந.சிவபாதம் (முன்னாள் **Foreman Oman Flor Mills, Oman**) ஆகியோரின் அன்பு மாமியும் திருமதி சிவப்பிரியா இந்துநேசன்(முன்னாள் விரிவுரையாளர் இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்), ஸ்ரீசிவகுமாரன் (**Product Manager, Human Diagnostics**), ஸ்ரீ சிவசக்தி (மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர்), உமையாள்(**Prefusionist**), உமாசுதன் (**Systems Engineer**) ஆகியோரின் பாசமிகு பாட்டியும் மாதுமை, வைகுந்தன், தருண் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.04.2006)புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12, கடைச்சாமி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5673

(49392)
(54-12-49)

தகவல்:
சகோதரன்,மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### கந்தசாமி கிருஷ்ணபிள்ளை

(முன்னாள் இ.போ.ச. சாரதி, அநுராதபுரம்)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கிருஷ்ணபிள்ளை 09.04.2006 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - தங்கம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசரத்தினம் - சீவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் யோகபதியின் அன்புக் கணவரும் கலைவாணி (சுவிஸ்), நந்தகுமார் (சுவிஸ்), கலைச்செல்வி (ஆசிரியை, வவு/விபுலானந்தா ம.வி), கோபிநான் ஆகியோரின் தந்தையும் சிவதாசின் (சுவிஸ்) மாமனும் சிவரம்ஜன், சிவபிரியா, சிவானுஜன் (சுவிஸ்) ஆகியோரின் தாத்தாவும் காலஞ்சென்ற மட்டுவில் வடக்கு இராசதுரை, பொலீஸ் அதிகாரி நடேசபிள்ளை மற்றும் பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2006)புதன் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தச்சன் கலட்டி,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(49397)
(33-54-12-49)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதர் விக்கியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குப் பின்னர் ரெலோ அமைப்பின் கா்ரியாலயத்தில் வைக் கப்பட்ட அவரின் பூதவுடலுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.கே. சிவாஜிலிங்கம், க. துரைரட்ணசிங்கம் ஆகியோர் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர்.

பின்னர் நகரசபை மண்டபத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு சட்டத்தரணி. ஆர்.ஜெகசோதி தலைமையில் இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, எஸ். அரியநேத்திரன், ஆர்.ரவிராஜ், சிவாஜிலிங்கம், துரைரட்ணசிங்கம் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர். குடும்ப உறுப்பினர்கள் சார்பில் நன்றியுரையை எஸ். பேரின்பராஜா நிகழ்த்தினார்.

திருமலை நகரசபை மண்டபத்திலிருந்து மாமனிதரின் பூதவுடல் பாடசாலை மாணவ மாணவியர்களின் 'பாண்ட்' இசையுடன் தபாற்கந்தோர் வீதி, மடத்தடி வீதி, கண்டி வீதி, திருமலை டிப்போ வீதி ஊடாகவே அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயத்தைச் சென்றடைந்தது.

வீதிகளில் திரண்டிருந்த பெருந் திரளான மக்கள் இறுதி அஞ்சலியில் கலந்துகொண்ட வேளை, காவல் கடைமையில் ஈடுபட்டிருந்த படையினர் வீதிகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும் நகர வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களை மூடி மாமனிதருக்கு அஞ்சலி செலுத்தினர். வீடுகள் தோறும் கறுப்புக் கொடி களும் பறக்கவிடப்பட்டிருந்தன.

இதேவேளை, மாமனிதர் விக்னேஸ்வரனின் சொந்த இடமான நயினாதீவில் நேற்று பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. விநாயகர் வீதிச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மலரஞ்சலி, நினைவுரைகள் என்பன இடம் பெற்றன.

(க)

# சொல்ஹெய்ம் கோரிக்கை

"வன்செயல் தொடர்கின்ற போதும், திட்டமிட்டபடி இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் ஜெனீவாவில் இம்மாதம் பத்தொன்பதாம் திகதி நடைபெறவுள்ள பேச்சில் பங்கு கொள்ள வேண்டும் என இரு தரப்பினரையும் எரிக் சொல்ஹெய்ம் கேட்டுள்ளார்."

கொழும்பில் உள்ள நோர்வேத்தூதரகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இலங்கை சமாதான நடவடிக்கைகளுக்கான நோர்வேயின் சிறப்பு முன்னாள் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

பேச்சுமூலமே பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். ஜெனீவாவில் இம்மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சில் இரு தரப்பும் கலந்து கொள்ளவேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க)

# புனர்வாழ்வுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு வைத்து யாழ். அரச அதிபருக்கும் அரச அதிபர் ஊ க ஜனாதிபதிக்குமான மகஜர் கையளிக்கப்படவுள்ளன.

அத்துடன் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் ஆகியவற்றிலும் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன

யாழ். மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்கள், தமிழ்த் தேசியத் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் இப்பேரணியில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஓ-7)

# பொது இணக்கப்பாடு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ, நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டசமயத்தில் ஐ. தே. க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய விடம் உறுதியளித்திருக்கிறார்.

அமைதிப் பேச்சுகளை வலுவான முறையில் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சிகளை எடுத்து வருகின்ற போதும் அவரது நேச அணிகள் இதுவிடயத்தில் அவருக்குப் பல்வேறு எதிர்ப்புகளை வெளியிட்டு இடைஞ்சல்செய்து வருகின்றன என்று கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே பிரதான எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்று அமைதி முயற்சிகளை வலுவான முறையில் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளாரெனத் தெரிகிறது.

ஐ. தே. க. தலைவர் நாடு திரும்பியவுடன் ஜனாதிபதியுடனான இந்த பேச்சுகளில் கலந்து கொள்வார் என்றும் கூறப்பட்டது.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் விடயத்தில் இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு, அனுசரணையாளராகச் செயற்படத்தயார் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அண்மையில் குறிப்பிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# ரவிராஜ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிமறித்த காடையர்கள் குழு, கற்கள், பொல்லுகளால் தாக்குதலை நடத்தி யது. இதனால், எம்.பியும், அவரது மெய்ப்பாதுகாவலர்களும் படுகாயமடைந்ததுடன், அவரது வாகனத்திற்கும் பலத்த சேதம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தை அப்பகுதியில் இருந்த இராணுவத்தினர் வெறுமனே கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர் என ரவிராஜ் எம்.பி. நேற்றுமாலை தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் குறித்துத் தாம் கந்தளாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்திருக்கிறார் என்றும் ரவிராஜ் எம்.பி. மேலும் கூறினார். (க)

# சுய பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தசுற்று ஜெனீவா பேச்சுகளுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள தமது தளபதிகள் மற்றும் போராளிகளுடன் பேச்சுகளை நடத்தவேண்டுமென்றும் அதற்காக கிழக்கிலிருந்து அவர்கள் வன்னிவருவதற்கு போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படவேண்டுமென்றும் முன்னதாக அரசை விடுதலைப் புலிகள்கோரியிருந்தனர்.

ஆனாலும், வான்வழிப் போக்குவரத்து வசதி வழங்கமுடியாது என நிராகரித்த அரசு, கடற்படையினரின் கலங்கள் மூலம் புலிகள் வன்னிக்குச் செல்லமுடியுமென்றும், அவ்வாறு செல்வதாயின் புலிகள் ஆயுதங்கள் எதனையும் பாதுகாப்புக்குத்தன்னும் கொண்டு செல்ல முடியாதென்றும் திட்டவட்டமாகக் கூறியிருந்தது.

ஆனால், இதனை முற்றுமுழுதாக நிராகரித்த விடுதலைப் புலிகள், அரசாங்கத்தின் இந்த யோசனையை ஏற்கமுடியாதெனக் கூறிவிட்டனர். அத்துடன் இது தொடர்பில் விளக்கமளிக்கும் விரிவான கடிதமொன்றை விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்பி வைத்திருந்தார்.

இந்நிலையிலேயே கிழக்கிலிருந்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் தமது சுய ஏற்பாட்டில் வன்னிக்குச் செல்வதற்கான திட்டம்பற்றித் திடீரென நேற்று அரசுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் இவ்வாறு கிழக்கிலிருந்து தமது சொந்தப்பாதுகாப்புடன் கடல் மார்க்கமாக வன்னிக்கு செல்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களாயின் அது பல்வேறு அரசியல் ரீதியான தாக்கங்களை தெற்கில் ஏற்படுத்தலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(க)

# தம்பலகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கடற்படைச் சிப்பாய்கள் ஒன்பதுபேரும் உடனடியாகத் திருகோணமலை கடற்படை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அங்கு சிகிச்சையளிக்கப் பட்ட பின்னர் இவர்கள் மேலதிக சிகிச்சைகளைப் பெறுவதற்காக நேற்றுமாலை விசேட விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டனர் எனத் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து, பாதுகாப்புப் படையினர் தம்பலகாமம் பகுதியில் தீவிர தேடுதல்களை நடத்தினர். இந்தச் சம்பவத்தையடுத்து கிழக்கு மாகாணத்தின் முக்கிய இடங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

(க)

# திட்டமிட்டபடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்து தமது தலைமையுடன் கலந்துரையாடிய பின்னரே அடுத்த சுற்றுப்பேச்சுக்கு செல்வதா, இல்லையா என்பதைப் புலிகளின் தலைமை தீர்மானிக்கும் என்று கூறியுள்ள புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தளபதிகளின் வன்னிப் பயணம் தொடர்பாக அரசு போடும் கெடுபிடி ஏற்பாடுகள் ஏற்கப் பட முடியாதவை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

அதேசமயம் -

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் படு கொலை, ஒட்டுப்படைகளின் தொடரும் பிற வன்முறைகள், கடந்த சில தினங்களாக தீவிர மடைந்துவரும் கிளைமோர்த் தாக்குதல்கள் என்பன இருதரப்புகளுக்கு இடையிலான முரண்பாடுகளை மேலும் தீவிரமடையச் செய்து அமைதிப் பேச்சுகளின் வாய்ப்பை அசாத்தியமாக்கி வருகின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

முன்னைய திட்டப்படி அடுத்த புதன்கிழமை - அதாவது ஒரு வாரத்தில் - அடுத்த சுற்று அமைதிப் பேச்சு ஜெனீவாவில் நடைபெற வேண்டும்.

இப்போது ஏற்பட்டிருக்கும் முரண்பாட்டு நிலைமை - விரிவடைந்திருக்கும் பிளவு - அதற்கிடையில் தீர்க்கப்படும் வாய்ப்பு மிக மிகக் குறைவு என விடயமறிந்த வட்டாரங் கள் தெரிவித்தன.

(க)


SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள் 2006
ஆரம்பம் 14,15.04.2006
Special Offer 2000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 | 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN NETWORK ENGINEERING | 5 Months |
| DIPLOMA IN WEB DESIGNING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER SCIENCE | 6 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | 2 Months |

Softview Computer College
Www.scclanka.com scclanka@hotmail.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811



எதிர்பாராத வினாக்களுக்கு எதிர்பார்க்கும் விடை அளிக்கும்
கருத்தரங்கு
தமிழ்
தமிழ்க்குழந்தை
ஆரம்பம்
26.04.2006 (9 மணி)
20 ஆம் திகதிக்குமுன் அனுமதிகளைப்பெற்றுக் கொள்ளவும்.
வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.
விக்னா கல்வி நிறுவனம்

A/L 2006
வணிகக்கல்வி
கருத்தரங்கு
21ஆம், 22 ஆம், 28ஆம், 29 ஆம் திகதிகளில்
By: V.முரளி (B.B.A.)
18 ஆம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
விக்னா கல்வி நிறுவனம்


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 01-08-1926 மறைவு 13-03-2006

### அமரர் கணபதிப்பிள்ளை கதிரவேலு

13.03.2006 அன்று இறைவனடி சேர்ந்த கணபதிப்பிள்ளை கதிரவேலுவின் 31 ஆம் நாள் ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று (12.04.2006) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து மதியபோசனத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: க.இராசேந்திரம்.
*கீரிமலை வீதி, சித்தங்கேணி.* (49403) (18-12)


மாபெரும் கருத்தரங்கு
தொடர்கள்
LOGIC
R.P.சர்மா, SRJ. சுதன்
காலம்: 16, 22, 23 -04 -2006
நேரம்: 9 a.m. (ப.நே.)
★ கொழும்பு றோயல் கல்லூரியில் எதிர்பார்க்கை வினாத்தொகுப்புகள்
★ அளவையியல் சுருக்கக் கையேடு
★ அலகு ரீதியான குறிப்பேடுகள்
D.C.M. யாழ்நகர்
*பதிவுகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.*


## மரண அறிவித்தல்

### பழனித்துரை வீரசிங்கம் (SPHI)

நல்லூரைச் சேர்ந்த பழனித்துரை வீரசிங்கம் அவர்கள் நேற்று (- .04.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.04.2006) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (49403) (18-12)

*இல. 24/ 2, குமார வீதி, நல்லூர்.*

தகவல்: ஞானபுராதனி (மகள்).



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,

2006 மே

வெளியீடு 02

# மாதிரி வினாப்பத்திரம்

## இரசாயனவியல் - I

திரு. சி. சுதாகரன்.B.Sc. திருகோணமலை.

(இரசாயனவியல் -I பகுதி I இன் வினாத்தாள் 05.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றது.)

28. அணு ஐதரசன் நிறமாலை பற்றிய கூற்றுகளுள் தவறானது?
    I. நிறமாலையில் சக்தி அதிகரிக்கும் திசைக்குச் சார்பாக மீடிறன் குறைந்து செல்லும்.
    II. சக்தி குறைந்த தொடர் பாசன் தொடர் ஆகும்.
    III. தரப்பட்ட தொடரொன்றில் பக்கத்து கோடுகளிற்கிடையிலான இடைவெளி சக்தி அதிகரிக்கும் திசையில் குறைகின்றது.
    IV. உறிஞ்சல் நிறமாலையில் தெளிவாக வேறுபடுத்தப்பட்ட இருண்ட பல கோடுகள் தென்படும்.
    V. n =4 இலிருந்து n =2 இன் தாண்டல் Hβ கோட்டுக்குரியது.
29. இரசாயனப்பிணைப்புகள் பற்றிய பின்வரும் கூற்றுகளுள் பிழையானது?
    I. மேற்பொருந்தல் என்பது அணு ஒபிற்றல்கள் ஒன்றுடன் ஒன்று கலத்தல் ஆகும்.
    II. இரு p ஒபிற்றல்களின் மேற்பொருந்துகையில் r பிணைப்பொன்றோ π பிணைப்பொன்றோ உருவாக்கலாம்.
    III. கலப்பில் ஈடுபடும் s,p ஆகிய ஒபிற்றல்கள் ஒரே அணுவுக்குரியனவாக இருக்க வேண்டும்.
    IV. இரு s ஒபிற்றல்களின் மேற்பொருந்துகையில் π பிணைப்பொன்று உருவாக்கலாம்.
    V. r π பிணைப்பு என்பன ஒருவகை பங்கீட்டு வலுப்பிணைப்புக்குள்ளாகும்.
30. A,B,C என்பன ஆவர்த்தன அட்டவணையில் அடுத்துவரும் மூன்று தூண்டுதலற்ற மூலகங்களாகும். இம்மூலகங்களின் முதலாவது, இரண்டாவது அயனாக்கற்சக்திகள் தரப்பட்டுள்ளன.


| | A | B | C |
|---|---|---|---|
| $I_1$ | 1940 | 505 | 740 |
| $I_2$ | 3250 | 4250 | 1970 |


ஆவர்த்தன அட்டவணையில் மூலகம் B அடங்கியிருக்கும் கூட்டம்?
I. I  II. II  III. III  IV. IV  V. V

31. பின்வருவனவற்றுள் எது மூலர்சாலகச்சக்தி அதிகரிக்கும் வரிசையைக் காட்டுகிறது
    I. SrO > CaO > Mgo > BeO  II. BeO > MgO > CaO > SrO
    III. BeO > Mgo > SrO > CaO  IV. CaO > SrO Mgo > BeO
    V. சரியாக கூறமுடியாது
32. பின்வரும் விஞ்ஞானிகளின் தொடர்புகளில் பிழையானது?
    I அணுவின் கருமாதிரிவுரு :- கைகர் மாஸடன்
    II இலத்திரனின் திணிவு :- தொம்சன்
    III சக்தி மட்டங்கள் தொடர்பானது :- நீல்போர்
    IV மின் அணுத்தன்மையானது :- பரடே
    V சாரணுத்திணிவின் தந்தை :- கனிசாரோ
33. பின்வருவனவற்றுள் எது வெப்பமிறுக்கும் முப்பரிமான பல்பகுதியம் ஆகும்?
    I பொலித்தீன்  II. ஸ்ரைறீனுன்  III. PVC
    IV. பேக்லைட்  V. புரதம்.
34. KBr ஐயும் KI ஐயும் வேறுபிரித்தறியப் பின்வருவனவற்றுள் எதைப்பயன்படுத்த முடியாது?
    I. செறி $HNO_3$  II. $cl_2/H_2O$  III. செறி $H_2SO_4$  IV. Hcl  v. செறி $HclO_3$
35. கீழேயுள்ள பரிசோதனை அமைப்புகளின் அடிப்படையில் $R\alpha\ [X]^m\ [Y]^n\ [Z]^p$ எனத் தரப்படுகிறது.


| பரிசேதனை இல | ஆரம்பச செறிவு [X] | [Y] | [Z] | தாக்கவீதம் (s-1) |
|---|---|---|---|---|
| 1 | 0.10 | 0.01 | 0.05 | 10 |
| 2 | 0.10 | 0.02 | 0.10 | 20 |
| 3 | 0.10 | 0.02 | 0.20 | 20 |
| 4 | 0.20 | 0.02 | 0.05 | 80 |
| 5 | 0.40 | 0.02 | 0.08 | - |


பின்வருவனவற்றுள் எது சரியானது?
    I. $R= K [X][Y]^2 [Z]$
    II. $R= K [X]^2 [Y] [Z]$
    III. $R= K [X] [Y^2]$
    IV. $R= K [X]^2 [Y]$
    V. $R= K [X]^2$
36. பின்வரும் கூற்றுகளுள் எது பிழையானது?
    I. படிமுறைத்தாக்கமொன்றில் தாக்கவீதமானது மெதுவான படியில் தங்கியிருக்கும்.
    II. வெப்பநிலை மாறும்போதும் ஒரு தாக்கத்தின் வெப்பநிலை மாறாதபோதும் அதன் தாக்கவீதம் மாற்றமடையும்.
    III. பெரும்பாலான தாக்கங்களில் வெப்பநிலை மாறாதபோதும் அதன் தாக்கவீதம் மாற்றமடைகிறது.
    IV தாக்கவீதமாறிலி ஆனது பதார்த்தங்களின் செறிவில் தங்கியிருக்கும்.
    V. ஊக்கியுள்ளபோது ஏற்படும் தாக்கவீதமானது ஊக்கியுள்ளபோது செறிவில் எப்போதும் தங்கியிராது.
37. 100ml கொண்ட 0.1M $Na_2SO_4$, 100ml கொண்ட 0.250M Nacl உம் 200ml கொண்ட 0.025m $Na_3PO_4$ கொண்ட கரைசல்களை ஒருமிக்க கலந்துகொள்ளும் போது உண்டாகும் $Na^+$ இன் செறிவு யாது?
    I. O.10M  II. 0.150M  III. 0.120M  IV. 0.06M  V. 0.04M
38. பின்வருவனவற்றுள் எது உயர்ந்த உருகுநிலையுடைய பதார்த்தம்?
    I. $CO_2$  II. $H_2O$  III. Nacl  IV. BaO  V. MgO
39. தரப்பட்ட பதார்த்தத்தின் ஆவியமுக்கம் எப்போது அதிகரிக்கும்?
    I. வெப்பநிலை அதிகரிக்கும்போது
    II. பதார்த்தம் வளிமண்டலத்திற்குத் திறந்திருக்கும்போது
    III. வளிமண்டல அமுக்கம் அதிகரிக்கும்போது
    IV. பதார்த்தத்தின் மூல் எண்ணிக்கை அதிகரிக்கும்போது
    V. மேற்குறிப்பிட்ட எதுவுமல்ல
40. $H_2S$, $SO_3$, $SO_2$, என்பவற்றை வேறுபடுத்தியறியப் பயன்படுவது யாது?
    a) ஈய அசற்றேற்று, அமில $Kmno_4$
    b) அமில $Kmno_4$, அல்லது $K_2Cr_2O_7$
    c) சுண்ணாம்பு நீர் , $Hcl_{(aq)}$
    d) ஈரமானபூவிதழ் , $cl_{2\,(aq)}$
41. $Zn^{2+}_{(aq)} + 2e$ '! $Zn_{(s)}$ $E^?_{(el)}$ = - 0.76 V $Ag^+_{(aq)} + e$ '! $Ag_{(s)}$ $E^?_{(el)}$ = +0.80 V ஆகிய இரண்டும் தரப்பட்டுள்ள கலம் $Zn_{(s)} / Zn^{2+} // Ag+_{(aq)} / Ag_{(s)}$ பற்றிய கூற்றுகளுள் சரியானது?
    a) கலம் தொழிற்படுகையில் $Zn_{(s)}$ படியும்.
    b) கலம் தொழிற்படுகையில் $[Zn^{2+}_{(aq)}]$ இன் செறிவு குறையும்.
    c) இலத்திரன்கள் வெளிச்சுற்றில் Ag இலிருந்து Zn மின்வாயை நோக்கி நகரும்.
    d) கலம் எழுதப்பட்டபடி அதிகூடிய emf பெறுமானம் +1.56 V
42. பின்வரும் கூற்றுகளில் வாயுவிலுள்ள மூலக்கூறுகள் பற்றி சரியானது எது?
    a) குறிப்பிட்ட வெப்பநிலையில் எல்லா மூலக்கூறுகளும் ஒரே வேகத்தை உடையன.
    b) மாறா வெப்பநிலையில் இவை மாறா இயக்கப்பண்புச் சக்தியுடையவை.
    c) வெப்பநிலை குறைகையில் கூடுதலான வீதம், குறைவான சக்தியைக் கொண்டிருக்கும்.
    d) இவற்றின் சராசரி இயக்கப்பண்புச் சக்தி வெப்பநிலையில் தங்கியிருப்பதில்லை
43. பீனோல் எதனுடன் / எவற்றுடன் தாக்கமுறும்?

a. 


b. 


c. ஐதான $HNO_3$
d. $CH_3COcl / OH^-$

44. 

வேறுபடுத்தியறியப் பின்வருவனவற்றுள் எதனைப பயன்படுத்தலாம்?
    a. நீர்மய $KHCO_3$
    b. தொலனின் சோதனைப் பொருள்
    c. சீசியம்
    d. நீர்மய KOH
45. தூயநீரைப்பற்றிய பின்வரும் கூற்றுகளுள் எது உண்மையானது?
    a) $[H^+] = [OH-] = 10^{-7} mol^{-1}$ ஆகக் காணப்படலாம்.
    b) $[H_3O^+] >$ Kw
    c) $[H_3O^+] > [OH]$
    d) நீர் மூலக்கூறு ஏகபரிமாணமானது.
46. இலட்சியமற்ற வாயுக்களுடன் சம்மந்தப்படும் பின்வரும் கூற்றுகளுள் எது / எவை சரியாகும் ?
    a) அமுக்கத்தைக் குறைக்கும்போது வாயுக்களின் இலட்சியத்தன்மை கூடுகிறது
    b) வெப்பநிலையைக் குறைக்கும்போது வாயுக்களின் இலட்சியத்தன்மை கூடுகிறது
    c) வாயுவின் அமுக்கம் கூடும்போது மூலக்கூற்றிடைவிசைகள் கூடுகின்றன
    d) பருமன் குறைந்த வாயுக்களும் மூலக்கூற்றிடைக்கவர்ச்சி குறைந்த வாயுக்களும் கூடியளவு இலட்சிய நடத்தையை அண்மிக்கும்
47. பின்வருவனவற்றுள் எது / எவை புறவெப்பத்தாக்கங்களாகும்?
    a) $O_{(g)} + 2e$ '! $O^{2-}_{(g)}$  b) $Mg+_{(g)}$ '! $Mg2+_{(g)} + e$
    c) $cl_{2(g)}$ '! $2cl_{(g)}$  d) $Nacl_{(s)}$ '! $Na^+ cl^-_{(g)}$
48. பின்வரும் பொறிமுறை நுட்பங்களில் தவறானது?
    a) $\cdot CH_3 + cl\cdot \rightarrow CH_3cl$
    b) $\cdot CH_3 - C(=O) - H + :CN^- \rightarrow CH_3 - CH(O^-) - CN$
    c) 

    d) $CH_3 - CH = CH_2 + H - Br \rightarrow CH_3 - CH(Br) - (+)CH_2$
49. பின்வரும் நீர்க்கரைசல்களில் எது /எவை $H_2S$ உடன் கலங்கல் தன்மையைத் தோற்றுவிக்கும்?
    a) $Na_3AsO_4$  b) [illegible] $cl_3$  c) $Na_2SO_3$  d) $Pb(CH_3COO)_2$

| | கூற்று 1 | கூற்று 2 |
|---|---|---|
| 50 | $cl_2$ வாயுவை உலர்த்த செறி $H_2SO_4$ பயன்படுத்தலாம் | செறி $H_2SO_4$ சக்திவாய்ந்த நீரகற்றும் கருவியாகும். |
| 51. | $NH_3$ ஆனது ஒட்சியேற்றும் கருவியாகத் தொழிற்படமுடியாது. | N ஆனது $NH_3$ இல் மிகக் குறைந்த ஒட்சியேற்ற எண்ணைக் கொண்டுள்ளது. |
| 52. | $H_2s$ இல் பிணைப்புக் கோணம் $H_2O$ இன் பிணைப்புக் கோணத்திலும் குறைவு ஆகும். | F இனது அணுவாரை cl இன் அணுவாரையிலும் குறைவு. |
| 53. | சோடியம் குளோரைட்டின் கரைதிறன் தூயநீரிலும் பார்க்கச் செறிHcl இல் கூடவாக இருக்கும். | Nacl செறி Hcl உடன் கலக்கப்படுகையில்கரையக்கூடிய சிக்கலயன் உருவாகிறது. |
| 54. | மின் கலமொன்றில் மின்னியக்க விசை மின் பகுபொருள் வெப்ப நிலையில் தங்கியிருப்பதில்லை. | இலத்திரன்களின் அசைவு வெப்பநிலையில் தங்கியிருப்பதில்லை. |
| 55. | வெப்பநிலையில் அதிகரிப்புடன் புறவெப்பத்தாக்கவீதம் குறையும். | எல்லா புறவெப்பத் தாக்கங்களும் உயர் ஏவற்சக்தி உடையன. |
| 56. | $Ni^{2+}$ அயனானது Hcl முன்னிலையில் $H_2S$ இல் வீழ்படிவாகாது. | Nis வீழ்படிவு செறி $HNO_3$ இல் கரையாது. |
| 57. | $CH_3-CHOH-CH_3$ ஐயும் $CH_3CH_2OH$ ஐயும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுத்தியறிய அமிலப்படுத்திய $K_2Cr_2O_7$ பயன்படுத்தலாம். | அமிலப்படுத்திய $K_2Cr_2O_7$ ஆனது செம்மஞ்சளிலிருந்து பச்சை நிறமாக மாற்றமடையும். |
| 58. | பென்சீனைத் தீவிரநிலைமைகளில் நைத்திரேற்றம் செய்ய 1,3 Dinitro பென்சின் உருவாக்கியது. | $NO_2$ கூட்டம் பென்சீன் வளையத்தின் 3ஆம் நிலையை ஏவலகற்றுகிறது. |
| 59. | ஒரு குறிப்பிட்ட சமநிலைத்தொகுதியில் சமநிலைமாறிலியை ஊக்கியானது மாற்றுவதில்லை | ஏதாவது ஒரு தாக்கத்தின் ஏவற்சக்தியை ஊக்கியானது எப்போதும் குறைக்கும். |
| 60. | கறுவா இலையினால் சிமைல்டிகைட் வேறு பிரிக்கும் போது பகுதிபடக்காய்ச்சி வடித்தல் பிரயோகிக்கப்படும். | நீருக்குச் சார்பாக சிமைல்டிகைட்டின் கொதிநிலை உயர்வாகும். |

(இரசாயனவியல் - II வினாத்தாளின் தொடர்ச்சி 19.04.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைக் குறிப்புகள்


# இணைந்த கணிதம் II

வெளியீடு 01

திரு S.S. செந்தில்ராஜ். B.Sc.யாழ்.

(இணைந்த கணிதம் II இன் விடைக்குறிப்புகள் 05.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளியாகியிருந்தன. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றன.)

07] (ii) [60]




சமச்சீரின்படி ஈர்ப்பையும் OX வழியே கிடக்கும் பரப்பு அலகு அடர்த்தி S என்க.

$Mr = \frac{1}{2} a^2 \delta\theta S$

$Xr = \frac{1}{2} a^2 \cos\theta$

ஆனால் $\bar{x} = \frac{\Sigma m_r x_r}{\Sigma mr}$


$$= \frac{\sum_{\theta=-\pi/2}^{\pi/2} \frac{1}{2} a^2 \delta\theta\, s.\ \frac{2}{3} a \cos\theta\ ;\ (\delta\theta \to 0)}{\sum_{\theta=-\pi/2}^{\pi/2} 1\ a^2\ \delta\theta\, s.}$$ [05]

$$= \frac{\frac{2a}{3}\int_{-\pi/2}^{\pi/2} \cos\theta\ ;\ d\theta}{\int_{\pi/2}^{\pi/2} d\theta}$$ [05]

$$= \frac{2a}{3}\frac{[\sin\theta]_{-\pi/2}^{\pi/2}}{[\theta]_{-\pi/2}^{\pi/2}}$$ [05]

$$= \frac{2}{3}\ a\frac{[1-(-1)]}{\pi/2-(-\pi/2)} = \frac{2}{3} a \times \frac{2}{\pi} = \frac{4a}{3\pi}$$

[05]




கன அலகு அடர்த்தி P என்க.

| பகுதி | நிறை | ஈர்ப்பு மையத்துரும் γ அச்சில் இருந்து |
|---|---|---|
| (i) சதுர அடர் | $4\ell^2 pg$ | $\ell$ [05] |
| (ii) அரைவட்ட அடர் | $\frac{\pi \ell^2 pg}{2}$ | $\frac{4\ell}{3\pi}$ [05] |
| (iii) எஞ்சிய அடர் | $L^2 pg\ [4 - \frac{\pi}{2}]$ | $\bar{x}$ [05] |

[05]

$\gamma\quad 4\ell^2 pg\, \ell - \frac{\pi\ell^2 pg}{2} \cdot \frac{4\ell}{3\pi} = \ell^2 pg\ \frac{8-\pi}{2}\ \bar{x}$

$4\ell - 2\ell = \frac{(8-\pi)}{2}\ \bar{x}$

$\frac{12\ell - 2\ell}{3} = \frac{(8-\pi)}{2}\ \bar{x}$ [05]

$\frac{20\ell}{3(8-\pi)} = \bar{x}$

$\bar{x} = \frac{20\ell}{3(8-\pi)}$

$\tan\theta = \frac{2\ell - \bar{x}}{\ell}$ [05]

$= \frac{2\ell - \frac{20\ell}{3(8-\pi)}}{\ell}$


$= \frac{6\ell(8-\pi) - 20\ell}{3\ell(8-\pi)}$

$= \frac{48\ell - 20\ell\ 6\pi\ell}{3\ell(8-\pi)}$

$= \frac{28\ell - 6\pi\ell}{3\ell(8-\pi)}$

$= \frac{2(14-3\pi)}{3(8-\pi)}$

(b)




Δ AOC இல் கோதான் விதிப்படி

$a\cot\theta.\ Co + (90-\theta) = \frac{\ell}{2}\ \cot\lambda - (a\cot\theta - \frac{\ell}{2}) \cot(\theta-\lambda)$ [10]

$a\cot\theta.\ \tan\theta = \frac{\ell}{2} \cot\lambda - (a\ \cot\theta.\ a\cot(\theta-\lambda) + \frac{\ell}{2} \cot(\theta-\lambda)$

$a\left\{\frac{1+\cos\theta.\ \cos(\theta-\lambda)}{\sin\theta\quad \sin(\theta-\lambda)}\right\} = \frac{\ell}{2}\left\{\frac{\cos\lambda\ +\ \cos(\theta-\lambda)}{\sin\lambda\quad \sin(\theta-\lambda)}\right\}$ [10]

$a\left\{\frac{\sin\theta\ \sin(\theta-\lambda) + \cos\theta.\ \cos(\theta-\lambda)}{\sin\theta\quad \sin(\theta-\lambda)}\right\}\frac{\ell}{2}\left\{\frac{\sin\lambda\ \sin(\theta-\lambda) + \sin\lambda \cos(\theta-\lambda)}{\sin\theta\quad \sin(\theta-\lambda)}\right\}$ [10]

$a\ \frac{\cos\lambda}{\sin\theta} = \frac{\ell}{2}\ \frac{\sin\theta}{\sin\lambda}$

$a\ \sin 2\lambda = \ell \sin^2\theta$ [10]

[50]

08] (a) $P(^B/_A) = \frac{P(A\cap B)}{P(A)}$ [05]

பரம்பரையினர் கல்வி கற்றல் - A என்க

பிள்ளை உயர்கல்வி கற்றல் - B என்க

சூழலில் உள்ளவர்கள் கல்வி கற்றல் - C என்க.

$P(B) = 0.4$ [05] $\quad P(^A/_B) = 0.8,$ [05] $\quad P(^C/_B) = 0.7$ [05]

$P(^A/_B) = \frac{P(A\cap B)}{P(B)}$

$0.8 = \frac{P(A\cap B)}{0.4}$ [05]

$p(A \cap B = 0.32)$

$P(^C/_B) = \frac{P(B\cap C)}{P(B)}$

$0.7 = \frac{P(A\cap B)}{0.4}$ [05]

$P(B\cap C) = 0.28$

மேலும் $P(A) = 0.6,$ [05] $\quad P(C) = 0.5$ [05]

$P(^A/_B) = \frac{P(B\cap A)}{P(A)}$ $\qquad P(^B/_C) = \frac{P(B\cap A)}{P(C)}$

$= \frac{0.32}{0.6}$ $\qquad = \frac{0.28}{0.5}$

$= \frac{8}{15}$ $\qquad = \frac{28}{50}$

$= \frac{40}{75}$ [05] $\qquad = \frac{42}{75}$ [05]

$\therefore P(^B/_A) < P(^B/_C)$

சூழலில் உள்ளவர்கள் கல்வி கற்றால், பிள்ளை உயர்கல்வி கற்பதற்கே சாத்தியக்கூறு அதிகமாகும்.

[50]

(b) காதல் திருமணம் செய்த ஆண் H என்க.
காதல் திருமணம் செய்த பெண் W என்க.

$P(H) = 0.6,$ [05] $\quad P(W) = 0.7,$ [05] $\quad P(^W/_H) = 0.8$ [05]

(i) $P(^W/_H) = \frac{P(W\cap H)}{P(H)}$ [05]

$0.8 = \frac{P(W\cap H)}{0.6}$ [05]

$P(W\cap H) = 0.48$

(ii) $P(^W/_H) = \frac{P(H\cap W)}{P(W)}$ [05]

$= \frac{0.48}{0.7}$

$= \frac{48}{70}$ [05]

$= 0.685$

$= 0.69$

(i) $P(W\cup H) = P(W) + P(H) - P(W\cap H)$ [05]

$= 0.7 + 0.6 - 0.48$

$= 0.82$

(ii) $P(W\cap H) \neq 0$

∴ தம்முள் புறநீங்கும் நிகழ்ச்சிகள் அன்று [05]

$P(W).\ P(H) = 0.7 \times 0.4$

$= 0.42$

$P(W).\ P(H) \neq P(W\cap H)$ [05]

∴ சாரா நிகழ்ச்சிகள் அன்று

[50]

(இணைந்த கணிதம் II இன் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 19.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org